தொகுதி உகூ
பகுதி கடுஉ

தாரண௵ ஆவணி௴
ஆகஸ்ட் 1944

# கலைமகள்

## சருகு

'துறைவன்'

துளிரென வானை நோக்கித் தகதக என்ன மின்னிக்
குளிர்மழை குலவிக் காற்றின் கூந்தலை வருடி மேவும்
அளியினந் தமக்கு வான்தோய் அன்பெனக் கவரி வீசிக்
களியுற்ற காலம் அன்று ; கவல்வதோர் காலம் இன்றே.

சிலிர்த்தது வாடை சீறச் செந்தளிர் மேனி யெல்லாம்
சலித்தது ; வானை நோக்கிச் சடைத்ததால் ஐயோ வென்றே
ஒலித்தது சருகு; 'நாமே உயர்த்தி'யென் றுன்னி, விந்தை
சொலித்தது போக இன்று சோர்வதோ கூளந் தன்னில்.

கொழுந்தெனக் குழைந்த தெல்லாம் குலைவுறப் புதுமை குன்றி
அழுந்திட அமைந்தேன் ; செய்த அழிமதி யாதோ காணேன்.
செழுந்தளிர் மேனி வற்றச் சேர்ந்தனன் மண்மேல்; ஆங்கே
'எழுந்திரு, குழந்தாய்' என்றே எழுப்பினன் காற்றுத் தேவன்.

'பருகிய துயர மெல்லாம் பரிதிமுன் பனியில் தேய
கருகிய உறுதி மீண்டும் கவையுறத் தளிர்ப்ப, வன்மை
பெருகிய நெஞ்சு விம்மப் பெருநிலை உய்ப்பன் ; வெற்றுச்
சருகெனக் கலங்கி ஓயும் சஞ்சலம் தவிர்க' என்றான்.

பிறக்கலாம் என்னும் ஆசை பிடர்பிடித் துந்த, மீண்டும்
சிறக்கலாம் என்னும் எண்ணம் சிந்தையில் அமுதம் பெய்யத்
'துறக்கலாம் வாழ்வை இன்று துணிவதே கருமம்' என்றே
'இறக்கலாம். இளப்பம் இல்லை' என்பதோர் தெளிவு கண்டேன்.

### அறிவிப்பு

காகிதக் கட்டுப்பாட்டு உத்தரவின் விளைவாக இந்த இதழில் 48 பக்கங்களே வெளியிட முடிந்தது. பக்கங்களை அதிகப்படுத்த எங்கள் கட்சியைத் துரைத்தனத்தாருக்கு எடுத்துரைத்திருக்கிறோம். அடுத்த மாதம் முதல் இன்னும் அதிகப் பக்கங்கள் வெளியிடலாமென்று நம்புகிறோம். கலைமகள் அன்பர்களுடைய ஆதரவையும் அன்பையும் பக்கபலமாகக்கொண்டு இந்த நிலை மாறுவதற்குரிய முயற்சிகளைச் செய்துவருகிறோம்.

—ப-ர்.

அட்டைப் படம் : தேசில வெங்கும் பொழிந்தது கண்டீர்
.................................... —விழிக்
கோணத்தைக் கொண்டு நிலவைப் பிடித்தாள். —பாரதியார்.

# பழைய காங்கிரஸும் காந்தியும்

டாக்டர். தி. சே. சௌ. ராஜன்

"என்ன டாக்டர், காங்கிரஸுக்குப் பிரதிநிதிகள் தேர்தல் செய்து பட்டியல் அனுப்பும்படி கடிதம் வந்திருக்கிறது. கூட்டம்போடத் தேதியும் நேரமும் குறிப்பிட்டு விளம்பரம் செய்தேன். என்னைத் தவிர வேறு ஒரு பிராணிகூடக் கூட்டத்திற்கு வரவில்லை. இப்படி இருக்கும் இந்த ஊரிலிருந்து காங்கிரஸ் பிரதிநிதிகள் எப்படி அனுப்ப முடியும்? உங்களுக்குப் பிரதிநிதிப் பத்திரம் கொடுக்கிறேன். நீங்களாவது போய் வாருங்கள்" என்று புகையிலை அடைத்துக்கொண்டிருக்கும் வாயில் எச்சில் ததும்பப் புன்சிரிப்புடன் ஸ்ரீமான் ராதாகிருஷ்ணையர் ஒரு நாள் சாயங்காலம் தெருவில் போய்க்கொண்டிருந்த என்னிடம் சொன்னார். ராதாகிருஷ்ணையர் ஒரு பி.ஏ., பி. எல். அவர் ஒரு வக்கீல் என்று சொல்லத் தேவையில்லை. நல்ல குணமுள்ளவர். தாழ்ந்த குரலில் பேச அவருக்குத் தெரியாது. வசீகர முகமுள்ளவர். திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்குச் செயலாளர். அதற்கு அறிகுறியாகக் காங்கிரஸின் சொத்து என்று சொல்லக்கூடிய ஒரே ஒரு நோட்டுப் புத்தகத்தைக் கையில் தாங்கிக்கொண்டு சாயங்கால நேரத்தில் திருச்சி டவுன் ஹாலை நோக்கிப் போய்க்கொண்டிருப்பார்.

பெயரளவில் காங்கிரஸ் கமிட்டியென்று அந்தப் புத்தகத்தில் சில நண்பர்களின் பெயர்கள் வரைந்திருக்கும். வருஷத்திற்கு ஒரு முறை பிரதிநிதிகள் அனுப்பப் போடப்பட்ட கூட்டமும், தேதியும், பிரசன்னமாகாத சில பிரதிநிதிகளைப் பொறுக்கி எடுத்த ஜாப்தா ஒன்றும் காணப்படும். நான் முதல் முதலாக இந்த அரிய கிரந்தத்தைப் பரிசீலனை செய்தது 1914-ஆம் வருஷத்தில்தான். அப்பொழுது காங்கிரஸ் சபை நிதானக் கட்சியாருடைய ஆதிக்கத்தில் இருந்தது. அவர்கள் கொள்கைக்கு உடன்பட்டவர்களே பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுக் காங்கிரஸுக்குச் சென்று நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாம். பிரதிநிதிகளாகச் செல்வதற்கு முன்பு உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்துச் செய்த பிறகுதான் கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இந்த நிலையில் நானும் ஓர் உறுதிமொழிப் பத்திரம் ராதாகிருஷ்ணையரிடமிருந்து பெற்று, சென்னையில் நடக்க இருக்கும் அவ்வருஷத்திய காங்கிரஸுக்குப் போக முடிவு செய்தேன்.

நிதானக்கோஷ்டியாருடைய அரசியல் கோட்பாடுகளை அறவே வெறுக்கும் மனப்பான்மையுடைய நான், உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட இசைந்தது என் கொள்கைக்கு ஒரு குறைவு. எனினும் காங்கிரஸில் சேர்ந்து அதை என் மனத்திலுள்ள தேசவிடுதலைக்கான சுதந்தரம் பெறும் கட்சியாக மாற்றவேண்டுமென்பதற்காகவே சேர்ந்தேன். என் போன்றவர்கள் அநேகர் பிரதிநிதிகளாகவே வரவும் இசைந்தார்கள். ஆனால் அந்தக் காலத்தில் உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டு வருஷம் ஒருமுறை காங்கிரஸ் நடக்கும் இடங்களுக்குப் போவதைத் தவிர வேறு அரசியல் தொண்டு ஒன்றும் இராது. காங்கிரஸிலும் பேச்சு வன்மை ஒன்றேதான் பலருக்குப் புகழும் பெருமையும் அளித்தது. நல்ல சொற்பொழிவாளர்கள் பேசுவதை எதிர்பார்த்துக் கூட்டம் காத்துக்கொண்டிருக்கும். நல்ல பிரசங்கிகளே தேசியத் தலைவர்களாக விளங்கினார்கள். கேட்பவர் மனம் குளிர நல்ல ஆங்கிலத்தில் அழுத்தந் திருத்தமாகப் பேசுபவர்கள், பெரிய தொகை நன்கொடை அளித்தவர்கள், ஹைகோர்ட் ஜட்ஜ்கள், பெரிய சர்க்கார் அதிகாரிகள் இவர்கள் காங்கிரஸ் மேடையில் அமர்ந்து காட்சி கொடுத்த காலம் அது. சென்னைக்குப் பல காரணங்களையொட்டி மக்கள் திரள் திரளாக டிசம்பர் மாதக் கடைசியில் கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில் வந்து கூடினார்கள். அநேகர் சென்னையிலேயே பிரதிநிதிகளாகச் சேர்ந்துகொண்டார்கள்.

கல்கத்தாவில் ஸொலிஸிட்டர் வேலையில் ஈடுபட்டிருக்கும் பூபேந்திரநாத் வசு தலைமை வகித்தார். நடை, உடை, பாவனை, பேச்சு எல்லாம் ஆங்கிலமயம்.

அவர் ஆங்கிலப் பிரசங்கம் மிகவும் அருமையாக இருந்தது. தீர்மானங்கள் எல்லாம் ஆங்கிலத்தில்தான். தலைவரின் கருணையினாலும், தயவாலும் ஒன்றிரண்டு தமிழ்ப் பிரசங்கங்களுக்கும் இடம் கிடைத்தது. தொண்டர்படைத் தலைவரின் தயவால் எனக்குக் கேட்கக்கூடிய தூரத்திற்குள் இடம் கிடைத்தது. அந்தக் காலத்தில் ஒலி பெருக்கி முதலிய வசதிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. நன்றாக உரக்கக் கதறக் கூடியவர்களின் பிரசங்கந்தான் கவனிக்கும்படி இருந்தது. "இன்று பிற்பகல் பாபு சுரேந்திரநாத் பேசுவார்" என்று விளம்பரம் செய்தால் அதற்காகக் கூட்டம் அதிகமாக வரும். எல்லாம் பேச்சுப்போட்டிக் களஞ்சியமாக விளங்கியது. தீர்மானங்கள் வழக்கம்போல எல்லா விதமான கோரிக்கைகளுடன், ராஜபக்திப் பிரமாணத்துடன், பேசி நிறைவேற்றப்பட்டன. காங்கிரஸ் நடவடிக்கைகள் ஒவ்வொரு பத்திரிகையிலும் அதனதன் போக்கிற்குத் தகுந்தபடி பிரசுரமாகி, ஒரு வாரத்திற்குப் படிப்பவர்களின் சிந்தனைக்கு உணவு கொடுத்தன.

இந்தக் காங்கிரஸ் நடவடிக்கைகளைக் கவனித்த பிறகு இதனால் பொதுமக்களுக்கும் தேசத்திற்கும் அதிக நலன் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை. அடிமைப்பட்டிருக்கும் ஒரு கூட்டத்தாருக்கு இன்றியமையாத சிற்சில சங்கடங்களை விளம்பரப்படுத்தவும், அதிகார வர்க்கத்தினர் மனத்தில் நம் நாட்டினரிடத்துத் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை ஒருவாறு வலியுறுத்தவும் பயன்பட்டதாகவே எனக்குத் தோன்றியது. காங்கிரஸ் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தவர்களில் பலர் அரசாங்கத்தாரிடம் பெரிய பதவிகளைப் பெற்றார்கள். அப்பதவிகளுக்கு அவர்கள் உரியவர்களல்ல என்று சொல்ல முடியாது. நம் சமூகத்தினரிடையில் நன்மதிப்பும் செல்வாக்கும் பெற்றவர்களே காங்கிரஸ் தலைவர்களாக அக்காலத்தில் மதிக்கப்பட்டார்கள். அதுமாத்திரம் அல்ல. சர்க்காரிடத்தில் களங்கமற்ற பக்தியும் மதிப்பும் பெற்றவர்களாக இருந்தால்தான் இந்தப் பதவிக்கு விரும்பி எடுக்கப்பட்டார்கள். சர்க்காரிடத்து இவர்களுக்கு மதிப்பு எவ்வளவு அதிகமாக இருந்ததோ அதற்குத் தகுந்தபடி காங்கிரஸ் தீர்மானங்களும் நல்ல செல்வாக்குடையனவாக இருக்கும் என்னும் எண்ணமும் காங்கிரஸை நடத்துபவர்களின் மனத்தில் குடிகொண்டிருந்தது. மக்களைத் தட்டி எழுப்பி, அவர்கள் உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் தேசிய உணர்ச்சியைத் தேச விடுதலையின் சார்பாகக் கிளப்பி உருப்படுத்தக்கூடிய சக்தி காங்கிரஸுக்கு இல்லை. முறையிடும் துறையிலே, அதிகாரிகளுடைய மனம் நோகாமல், நியாயத்தைப் பக்குவமாக எடுத்து உணர்ந்து வாதாடும் தோரணையைக் கைப்பற்றி வந்தது. ஆங்கிலம் படித்தவர்களைத் தவிர மற்றவர்கள் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு முடியாமற் போய்விட்டது. காங்கிரஸில் சேர்ந்தவர்களில் பெரும்பாலோர் வழக்கறிஞர்களாகத் தொழில் நடத்தும் வக்கீல்கள். ஆங்கிலத்தில் பேசும் திறன் அவர்களுக்குத் தொழில் முறையில் ஏற்பட்டுவிட்டதால், காங்கிரஸ் நடவடிக்கைகளிலும், கோர்ட்டு நடவடிக்கைகளைப்போலவே விவாதித்து முடிவுகட்ட அந்த அநுபவம் அவர்களுக்கு உதவியாக இருந்தது. மேலும் அந்தக் காலத்தில் வக்கீல் தொழில் சர்க்காருக்கு அடிமைப்பட்டு, ஓர் எஜமானனுடைய நன்மதிப்புக்கு ஈடுபட்டு நடத்தும் தொழிலாகக் கருதப்படவில்லை. தேச சேவைக்கு உரிய சுதந்தரம் பொருந்திய தொழிலென்றே எல்லோரும் அதைப் போற்றி வந்தார்கள். ஆனால் இந்த எண்ணம் இன்று முற்றும் மறைந்துவிட்டது. அதிகாரிகளோடு போர் புரியும் முறையில் காந்திஜி சட்டமறுப்பு இயக்கம் தொடங்கியவுடன் வக்கீல் தொழிலின் அடிமைத்தனம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. சுதந்தர இயக்கம் வலுவடையவே வக்கீல்களின் தொகை காங்கிரஸ் இயக்கத்தில் மெலிவடைந்தது. வழக்கறிஞர்களாக இருந்தாலும், நீதிமன்றங்களைத் துறந்து ஏழைமக்களுக்காகத் தொண்டாற்றிய பெரியோர்களே காங்கிரஸ் இயக்கத்தை நடத்த முன்வரும்படியாயிற்று.

சென்னையில் நான் கண்ட முதல் காங்கிரஸ் எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. இதற்கு என் மனப்பான்மையே காரணம். தீவிர அரசியல்வாதியாக, புரட்சிகளை உண்டாக்கி, மக்களை ஒருமித்து எழும்படி செய்து, அந்நியர்களை நாட்டை விட்டு ஓட்டிச் சுதந்தரம் அடையவேண்டுமென்ற கட்சியில் இளமையில் இருக்கும்பொழுது ஈடுபட்ட எனக்கு இந்த முடிவு ஏற்பட்டது ஆச்சரியமல்ல. ஆனால் நாட்டின் நிலைமையைக் கருதாது, ஒரு சிறிய கொள்கையை மட்டும் சிந்தித்து, மனக்கோட்டை கட்டி வருந்துவதில் பயனில்லை. அதற்கேற்ற

தியாகத்தை நான் மட்டும் செய்தால் போதாது என்ற ஓர் எண்ணம் உண்டு. உண்மையில் எனக்குள்ள பயங்கொள்ளித்தனத்தினால்தான் இந்த மனோபாவம் உண்டாயிற்று. சுதந்தரம் வேண்டுமென்றால் உயிரையும் தியாகம் செய்து அதைப் பெறவேண்டும். தியாகம் செய்யும் பொழுது நான் ஒருவன் மட்டும் செய்தால் காரியம் சித்திபெறுமா என்று எண்ணுவது கோழைத்தனம். காந்தியடிகள் அடிக்கடி சொல்வதுபோல, ஒவ்வொருவனும் தான் விரும்பும் பொருளை அடைய, சகலவிதமான தியாகத்தையும் செய்யவேண்டும். தன்னைப்பற்றிய மட்டில் தனது பரிபூரணத் தியாகமே தனக்கு விடுதலை அளிக்கும் என்கிற தத்துவத்தின் உண்மை ஒப்பற்ற ஒரு வீரன் மனத்தில்தான் உதிக்கும். போரில் ஈடுபடும் ஒவ்வொரு வீரனும் நான் ஒருவன் மட்டும் இறந்தால் ஜயம் கிடைக்குமா என்று நினைத்தால் யுத்தத்தின் முடிவு எப்படியாகும் என்பதை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். எந்தக் கிளர்ச்சியும் ஒரே காலத்தில் எல்லோர் மனத்திலும் உதயமாவதில்லை. புத்திக் கூர்மையும் உணர்ச்சியும் பொருந்திய ஒருவன் மனத்தில் தோன்றும் புனித எண்ணங்களே பெருவெள்ளமாக மாறி, மனித சமூகத்தைப் புரட்டி அமைக்கும். அந்த மனிதனது தியாகத்தின் பயனாகப் பலர் தியாகம் செய்ய முன் வருகிறார்கள். ஆற்றைக் கடந்து அக்கரை சேர விரும்பும் ஒவ்வொருவரும், தண்ணீரைக் கண்டு மயங்கி நீந்த முற்படாவிட்டால் தண்ணீரை எப்படித் தாண்டுவது? அது போன்றனவே உலக வியவகாரங்களும்.

உலகப்பற்று என்பது எல்லா மானிடர்களுக்கும் இயற்கை. இந்தப் பற்றுதல் பலவிதமாக உலாவுகிறது. உயிரின்மேல் பற்றுதல் எல்லோருக்கும் உண்டு. இது குடும்பவாழ்க்கையின் மூலம், சமூகத் தொடர் மூலம், தேசபக்தியின் மூலம், விரிவடைகிறது. அப்படி விரிவடையும் பொழுது படிப்படியாகச் சுயநலம் குறைந்து தியாக உணர்ச்சி மேலிடுகிறது. ஒரு தனி மனிதன் தன் ஆத்மா முக்திபெறும் பொருட்டுச் சர்வசங்க பரித்தியாகம் செய்கிறான். பற்றுக் குறையக் குறைய, அவனது கோரிக்கை ஈடேறுகிறது. தன் தனி ஆத்மாவின் நலத்துக்கே இவ்விதத் தியாகம் வேண்டியிருந்தால், ஒரு நாட்டின் விடுதலைக்கு எவ்வளவு அரும் பெரும் தியாகங்கள் செய்யவேண்டும்! அதிலும் சோனி, சப்பை, குருடு, நொண்டியாக இல்லாமல், மனத்திடமும், அஞ்சா நெஞ்சமும் உடையவராகி, தியாகத்தின் நிமித்தம் தம் உயிரை உள்ளங்கையிலேந்தி, பலிகொடுக்கப் போட்டிபோடும் வீரர்கள் பலர் வேண்டும். அப்படியிருக்க என் போன்றவர்கள் கோடிக்கணக்காக இருந்தும் என்ன பயன்? நமது சக்திக்கு ஏற்ற பலன்தான் நமக்குக் கிடைக்கும்.

உலகெல்லாம் சுற்றித் திரிந்து தமிழ் நாட்டுக்கு நான் திரும்பியதும் வைதிகப் போர் தொடங்கிவிட்டேன். அதிலும் நிதானமாகவே போர் புரிய முயன்றேன். முயற்சி பலிக்கவில்லை. சமூகத்தை விட்டு வெளியேறுவது சுலபமாகத் தோன்றியது. அப்படிச் செய்வதனால் சமூகம் முன்னேற மாட்டாது. அதனுள் இருந்து நாளடைவில் இடைவிடாது போராடிச் சற்றுத் தாமதமாகவே சிறிது பலன் உண்டானதாக நினைக்க இடம் ஏற்பட்டது. இவ்வ போன்ற எண்ணங்களே அரசியலிலும் என் மனத்தில் குடிகொண்டன. எனினும் என்னுடைய செய்கையே எனக்குப் பிடிக்கவில்லை.

1914-ஆம் வருஷத்தில் காந்திஜி சென்னைக்கு வந்தார். தென் ஆப்பிரிக்காவில், ஜர்மனியுடன் நடந்த மகாயுத்தத்தில் ஆங்கில அரசாங்கத்திற்கு உதவிபுரிந்தார். காயம்பட்டவர்களுக்கு உடன் உதவி செய்யும் இந்தியப் படையொன்று திரட்டி, அதில் தாமும் பங்கெடுத்து உதவி, இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே நோய்வாய்ப்பட்டுப் படையில் சேரமுடியாமல், அங்கிருக்கும் டாக்டர்கள் அபிப்பிராயத்திற்கு இணங்க, அந்தக் குளிர் தேசத்தை விட்டு இந்தியா வந்து சேர்ந்தார். உடல் நிலை குணமடைந்தவுடன் தம் அரசியல் குருவாகிய கோபால கிருஷ்ண கோகலேயின் ஸ்தாபனமாகிய "இந்திய ஊழியர்கள் சங்க"த்துக்குச் சென்று பார்வையிட்டு விவரம் தெரிந்தவுடன், அந்த ஊழியத்தின் நிபந்தனைகளுக்கும் தம் மனப்பான்மைக்கும் நீக்கமுடியாத அடிப்படையான மாறுபாடுகள் இருக்கக் கண்டு, அதில் சேராமல் தமது விருப்பத்துக்கும் தத்துவங்களுக்கும் இடையூறு இல்லாமல் வேலை செய்ய ஒரு தனி ஸ்தாபனம் நிறுவ முடிவு செய்து இந்தியாவின் பல பாகங்களைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். இந்தச் சுற்றுப் பிரயாணத்தின்பொழுது தாமும் தம் மனைவியுமாகச் சென்னை வந்து சேர்ந்தார்.

அப்பொழுது அவர் "மகாத்மா" ஆகவில்லை. தென் ஆப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம் செய்து, தலைவர் ஸ்மட்ஸ் துரையுடன் அங்கே குடியேறியுள்ள இந்தியர் விஷயமாக உடன்படிக்கை செய்துகொண்ட தேசபக்தர் அவர் என்பது, அயல் நாட்டில் உள்ள இந்தியரின் விஷயங்களைக் கவனித்துவரும் சிலருக்கே தெரியும். நாட்டுப் பொதுமக்களுக்கு அவரைப் பற்றி ஒன்றுமே தெரியாது. சென்னையில் அவரை அறிந்த நண்பர்கள் வெகு சிலர். அவர்களுள் ஸ்ரீமான் ஜி. ஏ. நடேசன் காந்திஜிக்கு நண்பர். அப்போது சேலத்தில் வக்கீலாக இருந்த சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியாரைப் பெயரளவில் கடிதப் போக்குவரத்து மூலம் தெரியும். சென்னையில் ஜி. ஏ. நடேசன் வீட்டில் காந்திஜி தங்குவதாக ஏற்பாடு ஆயிருந்தது. நடேசனும் அவருடைய நண்பர்கள் சிலரும், பத்திரிகை நிருபர்களும் சென்னை ஸெண்ட்ரல் ஸ்டேஷனில் அவரை வரவேற்பதற்காகச் சென்றிருந்தனர். ஆங்கில உடை தரித்து, உயர்தர வகுப்பு வண்டிகளில் பிரயாணம் செய்யக்கூடிய பெரிய மனிதர் என்ற உணர்ச்சியினால், இச்சிறிய வரவேற்புக் கூட்டம் முதல் இரண்டாம் வகுப்பு வண்டிகள் நிற்கவேண்டிய இடத்தில் பிளாட்பாரத்தில் மாலையும் கையுமாகக் காத்திருந்தது. வண்டி வந்து நின்றதும் அவர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள். காந்திஜியைக் காணவில்லை. ஆகையால் வண்டிகளினின்று இறங்கும் பிரயாணிகளை உற்றுக் கவனிக்க அங்கும் இங்கும் ஓடினார்கள். கடைசியாக மூன்றாவது வகுப்பில் அடைந்து கிடந்த பிரயாணிகளுடன், மூட்டையும் முடிச்சுமாக, தாமும் தம் மனைவி கஸ்தூரிபாயும் இறங்குவதைக் கண்டு முதலில் திடுக்கிட்டார்கள். பிறகு வியப்படைந்தார்கள். தமது இனிய, சிரித்த முகத்துடன் காந்திஜி அவர்களுடன் சிறிது நேரம் பேசிவிட்டு, நடேசனுடைய காரில் வீடு சேர்ந்தார். ஆங்கில உடை இல்லை. அசல் குஜராத்திப் பனியா தலைப்பாகை, பொத்தலில்லாத பழைய காலத்து நாடா கட்டி முடியும் ஒரு ஜிப்பா, அரையில் கச்சம் வைத்துக் கட்டிய வேஷ்டி, யக்ஞோபவீதமாக அணிந்திருக்கும் யோக வேஷ்டி - இவற்றுடன் காட்சி அளித்தார். தம் சாமான்களை அவரும் அவர் மனைவியும் எடுத்துக்கொண்டு கூலிகளின் உதவியில்லாமலே வண்டியேறினார். அன்று சாயங்காலம் சென்னைப் பத்திரிகைகளில் காந்திஜி வந்து இறங்கின விநோதம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அன்று பிற்பகல் நான் ஜி. ஏ. நடேசன் வீட்டில் காந்திஜியைச் சந்தித்தேன். , அவருக்கு என்னை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. லண்டன் நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்தவே பிறகு என்னை அறிந்துகொண்டார். "நான் இனிமேல் தென்னாப்பிரிக்கா போகப்போகிறதில்லை. தாய் நாட்டில் விடுதலையின்பொருட்டு உழைக்க எண்ணி வந்துவிட்டேன். சத்தியாக்கிரக தத்துவத்தைக் கடைப்பிடித்து என் வாழ்நாளை நடத்துவதையும், என் அஹிம்ஸா முறைகளை நம் நாட்டினருக்குப் பரப்புவதையும் என் பணியாகக் கொண்டிருக்கிறேன். அஹமதாபாத் நகரத்துக்கு அருகிலுள்ள ஸாபர்மதி நதிக்கரையில் ஆசிரமம் நிறுவித்தர ஒரு நண்பர் இசைந்திருக்கிறார். அங்கே சென்று தங்குவதற்கு முன்பாக இந்தியா முழுதும் சுற்றிப் பார்த்துவர எண்ணி வந்திருக்கிறேன். உனக்கு என்னுடன் உழைக்கப் பிரியம் இருந்தால், என்னோடு ஆசிரமத்தில் வந்து தங்கி வேலை செய்யலாம்" என்றார். எனக்கு இருக்கும் கஷ்டங்களை அவருக்கு எடுத்துச் சொன்னேன். "தாயை இழந்த மூன்று மக்கள் பாதுகாப்போரின்றி இருக்கிறார்கள். அவர்கள்பால் என் கடமையைச் செய்யவேண்டும். அதற்குப் பணம் தேவை. ஆகையால் தொழில் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. எனினும் தாங்கள் நாட்டின் பணியேற்று வேலை செய்யும் காலத்தில் என்னைச் சேர விரும்பினால் அப்பொழுது எவ்விதமான தியாகத்துக்கும் நான் முன்வருகிறேன்" என்றேன். எனது உறுதிமொழியை அன்புடன் ஏற்றுக்கொண்டு எனக்கு விடை அளித்தார். அன்று சாயங்காலம் சென்னைப் பிஷப் தலைமையின்கீழ் ஒய். எம். ஸி. ஏ. கட்டிடத்தில் தென் ஆப்பிரிக்கா இந்தியர் நிலைமையைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். பிறகு அஹமதாபாத் திரும்பிவிட்டார். சென்னையைப்பற்றிய மட்டில் காந்திஜி விஜயம் ஒரு சிறிய தினசரிச் சம்பவமாக இருந்தது.

# ரிஷி கர்ப்பம்

கா. ஸ்ரீ. ஸ்ரீ.



"பூச்சு" என்னும் பத்திரிகைக்கு நான் உதவி ஆசிரியராக வந்து, மூன்று வருஷங்கள் ஆகியிருந்தன. ஒரு நாள், பத்திரிகை ஆசிரியரான மூர்த்தி, திடீரென்று என்னைக் கூப்பிட்டனுப்பினர். இதழ் வெளியாகி இரண்டு நாட்கள் ஆயின. எழுத்தாளர்களுக்குச் சம்மானமும் அன்றுதான் அனுப்பி யாயிற்று. ஆகவே, அடுத்த இதழ் விஷயமாகத் தான் அவர் கூப்பிட்டிருக்க வேண்டும் என்று ஊகித்தேன்.

ஆசிரியர் பீடத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்த மூர்த்தி என்னைக் கண்டதும் புன்முறுவலோடு வரவேற்று, "இப்படி உட்காருங்கள், மிஸ்டர் கீர்த்தி" என்று எனக்கு ஆசனம் தந்தார்.

நான் அசையாமல் நாற்காலியில் அமர்ந்து அவரைக் கூர்ந்து பார்த்தேன். தமக்கு உலகிலேயே வேறு ஆப்தன் இல்லை போலவும், தம் இருதயத்திலுள்ள ரகசியங்களை யெல்லாம் என்முன்னால் கொட்டிவிட விரும்புபவர் போலவும் அவர் தோற்றினர். ஷட்ஜத்திலே ஆரம்பிக்கும் சங்கீதத்தைப்போல மெதுவாகப் பேச்சைத் தொடங்கினர்: "கேளுங்கள், கீர்த்தி. இனி நாம் விதவிதமான விசித்திரக் கதைகளை எழுதவேண்டும். இன்றை உலகம் ஒரே போட்டிமயமாக - பந்தய மைதானமாக - இருக்கிறது. எல்லாம் அவசரம்; ஓட்டம். கடிகார முள்ளோடு உலகம் ஓடுகிறது. இந்த ஓட்டத்தில் ஒரு ஸெகண்டு பின் தங்கியவன் வாழ உபயோகமற்றவனாகிவிடுகிறான். உங்கள் பேனா முனையினால் நீங்கள் ஓர் இரவில் பல மாய உலகங்களைச் சிருஷ்டித்துவிடவேண்டும். நொடிப் பொழுதில் வீசி மறையும் மின்னல் அகில உலகத்தையும் ஒளிமயமாக்கிச் செல்வது போல, உங்களுடைய நிமிஷநேர சிருஷ்டியில் உலக உண்மைகள் ஒளிவீச வேண்டும்..."

"சரிதான், உங்கள் அவசரம் எனக்குப் புரிகிறது ஒவ்வோர் இரவுக்கும் ஒரு கதை எழுதிவிடவேண்டும் என்கிறீர்கள். ரிஷி கர்ப்பந்தான்! ஆனால், உலகத்தைப் பாராமல், செக்குமாடுபோல நாள் முழுதும் உங்களைச் சுற்றியே சுழன்றுகொண்டிருந்தால் எங்கிருந்து புது அநுபவங்கள் வரும்? கற்பனை எப்படி உதயமாகும்?"

"இன்றையிலிருந்து எத்தனை நாளைக்கு வேண்டுமானாலும் உங்களுக்கு விடுமுறை தருகிறேன். நீங்கள் எங்கு வேண்டுமானாலும் சுற்றிப் புது அநுபவங்களைப் பெற்று அருமையான கதை எழுதிக் கொடுங்கள். அதுவரை என் முகத்தில் விழிக்க வேண்டாம்" என்று ஆத்திரத்தோடு கூறினர். உடனே மானேஜருக்கு எனக்கு வேண்டிய அளவு பணம் கொடுக்குமாறு கடிதம் எழுதிப் பையனிடம் கொடுத்தனுப்பினர். நான் அவரிடம் விடை பெற்று வீடு திரும்பினேன்.

* * *

கல்கத்தாவுக்கு டிக்கெட் கிடைக்கவில்லை. பஞ்சத்தினின்றும் தப்பிய நண்பர்களையாவது பார்த்துவரலாம் என்ற என் எண்ணத்தில் மண் விழுந்தது. இரண்டாம் வகுப்புக் 'கௌண்டரி'ல் இருந்த குமாஸ்தா, "ஸார், எங்களுக்கு டிக்கெட் கொடுக்க உத்தரவு இல்லை. ஒரு காலத்தில் நாங்களே, 'புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்துப் புண்ணிய மூட்டைகளைக் கட்டுங்கள்; புனித நதிகளில் நீராடி உங்கள் பாவ அழுக்கைக் கழுவுங்கள்; நாட்டின் இக்கோடியிலிருந்து அக்கோடிவரையில் வியாபாரம் செய்யுங்கள்; ஒன்றும் இல்லாவிட்டால், எங்கள் ரெயிலில் பிரயாணம் செய்து, பிழைப்புக்கு வேண்டிய பலவழிகளைக் கற்றுக்கொள்ளுங்கள்' என்றெல்லாம் விளம்பரம் செய்துவந்தோம். இன்று 'பிரயாணம் செய்யாதீர்கள்' என்று சொல்ல வேண்டிய காலமாக இருக்

கிறது. நாங்கள் என்ன செய்வது?" என்று நீண்ட பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார். அவருடைய சட்டைப்பையில் கனத்தை ஏற்றி, டிக்கெட் வாங்க எனக்கு மனமில்லை. "பெஜவாடாவுக்கு ஒரு டிக்கெட் கொடுங்கள், போதும். அங்கிருந்து பிறகு பார்த்துக் கொள்கிறேன்" என்றேன். டிக்கெட் பெற்று வண்டியில் அமர்ந்தேன். இரண்டாம் வகுப்பிலும் கூட்டம் இல்லாமலில்லை.

மெயில் புறப்பட்டது. அன்றெல்லாம் அலைந்த ஓய்ச்சலில், கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். 'பேஸின் பிரிட்ஜை'த் தாண்டி, வண்டி பாய ஆரம்பித்தது. 'ஆசிரியர் மூர்த்தி சொன்னது உண்மையே. எல்லாம் அவசரம்; ஓட்டம்; ரிஷி கர்ப்பம். டிரைவருக்குப் பயந்து, இந்த வண்டி ஒரே இரவில் பிசாசு போல ஓடி நூற்றுக்கணக்கான மைல்களைத் தாண்டிவிட வேண்டும். விமான நிலயத்திலிருந்து விமான ஓட்டிக்கு உத்தரவு வருகிறது: பொழுது விடியுமுன் அவனுடைய விமானம் இலங்கையில் இருக்க வேண்டும். ஒரு 'காம்பி'ல் வீரர்கள் நிச்சிந்தையாகத் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். படைத் தலைவனிடமிருந்து திடீரென்று கட்டளை பிறக்கிறது. 'திமு திமு' வென்று எழுந்து அந்தப் படை அணிவகுத்துச் செல்கிறது. சில மணி நேரத்தில் எதிரியின் சைனியம் சின்ன பின்னமாகிவிடுகிறது. காலவேகத்தோடு பூமிகோளம் சுழலுகிறது. போராட்டங்களின் வேகத்தில் வாழ்க்கை மாறுகிறது..' என்று நினைக்கலானேன். வண்டியின் ஓட்டம், 'ரிஷி கர்ப்பம், ரிஷி கர்ப்பம்' என்று தாளமிடுவதுபோல இருந்தது. ஆகாயத்தில் திரயோதசிச் சந்திரன் உதயமாகியிருந்தான். பனியோடையில் 'மெயில்' மிதந்து ஓடுவதுபோலத் தோற்றியது. 'இந்தக் கிரகங்கள் மட்டும் என்ன? அவற்றின் ஓட்டத்திலிருந்து, உலக மாறுதல்களையும் கிரகணங்களையும் வான சாஸ்திரிகள் எவ்வளவு சரியாகக் கணக்கிட்டு விடுகிறார்கள்! அந்த ஓட்டத்தில் ஏதாவது ஒரு கிரகம் ஒரு ஸெகண்டு தவறினால், அவ்வளவுதான்! அண்ட கோளங்கள் உருளும்; மகாப்பிரளயம் வந்துவிடும்!' என்று எண்ணிக்கொண்டிருக்கையில் என்னையும் அறியாமல் கண் அயர்ந்தேன்.

வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனைத் தாண்டி விரைந்து சென்றுகொண்டிருந்தது. நிலவு என் கண்ணின் புறமாக ஜில்லென்று வீச, கண் விழித்தேன். என் தலைப்புறம் மெத்தென்று இருந்தது. ஒரு சுகந்தக் குவியலின் நடுவே இருக்கும் அநுபவம் எனக்கு உண்டாயிற்று. பல வருஷங்களாக நான் பெற ஏங்கியிருந்த வெப்பத்தை உணரலானேன். இரண்டு கண்களையும் விழித்துப் பார்த்தேன்: ஒரு சுந்தரியின் மடியில் நான் கிடந்தேன். கருமுகிலையொத்த அவள் கூந்தல் முன்புறத்தில் இரு மருங்கிலும் நாகம்போல நெளிந்து அலையலையாக விளைந்திருந்தது. நீண்ட கரிய பின்னல் மார்பினிடையே தொங்கியது. அதன் உச்சியில் வெண்மலர்கள் தலை நீட்டிப் பார்த்தன. சந்திர மண்டலத்தில் அவள் வதனத்தைக் கண்டேன். அந்தப் பேரொழிலைக் கண்டு கண் கூசியது. மீண்டும் கண்ணை மூடிக்கொண்டேன். அவளை எங்கோ பார்த்த ஞாபகமாக இருந்தது. 'எங்கே? போன ஜன்மங்களிலா, அழகிய ஓவியங்களிலா, அல்லது இந்திரஜால மாயத்திலா?' நான் இந்த நினைப்பில் இருந்தபோது, "நான்தான்; பயப்படாதீர்கள்!" என்றாள் அவள். யுகயுகாந்தரங்களாக, ஜன்ம ஜன்மாந்தரங்களாக, வாழ்வின் கேளிக்கைகளிலும் துயரங்களிலும் இந்தக் குரலைக் கேட்டிருப்பது போன்ற அநுபவம் எனக்கு உண்டாயிற்று; அவள் வசத்தில் என்னைப் பறி கொடுத்தது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று.

வண்டியில் என் எதிரே பலர் இருந்தார்கள்: கிழவர்கள்; இளைஞர்கள்; யுவதிகள். இந்தக் கோலத்தைப் பார்த்து அவர்கள் என்ன நினைக்க மாட்டார்கள்?

மீண்டும் கண் விழித்து அவர்களைப் பார்த்தேன். எல்லோரும் ஆச்சரிய உலகத்தில் இருந்தார்கள். அந்த மங்கையைப் பார்த்தேன். துன்பத் தீயில் கலங்கி மாற்றேறிய முகம். உயர்ந்த வம்சத்தில் பிறந்து வழி வழியாக வந்த கலைப்பண்பு ஜ்வாலை வீசியது. கண்களில் அற்புதமான தூய்மை. நம்பிக்கையே உருவாக அவள் வீற்றிருந்தாள். அவள் மடியில் அல்ல, நம்பிக்கையின் மடியில் நான் கிடந்தேன். அதற்குத் துரோகம் செய்ய என் உள்ளம் இடங் கொடுக்கவில்லை. "பெஜவாடாவில் நாம் இறங்கவேண்டும்" என்று மெல்ல முணுமுணுத்தேன். 'சரி' என்பதுபோல, அவள் தலை அசைத்தாள்.

மறுபடி சுற்றுப் புறத்தைப் பார்த்தேன். ஆச்சரியம் தணிந்துவிட்டது. அவர்கள்

காண நினைத்திருந்த மாய உலகம் மறைந்து விட்டது; ஆனால் நான் மட்டும் மாய உலகத்திலேயே இருந்தேன்.

'புது அநுபவம் வேண்டும் என்று சொன்னாரே உன் ஆசிரியர்; இதை எழுதித் தொலை' என்றது மனம்.

வேதாந்தம் பேசியது மற்றோர் எண்ணம்: 'நீ நைஷ்டிகப் பிரம்மசாரியாக இருக்க விரும்பினாயே; உனக்கு இது சோதனை. ஹநுமான் சீதையைத் தேட ராவணனுடைய அந்தப்புரத்தில் புகுந்தார்; காணத்தகாத காட்சிகளைக் கண்டார். புதுமையைத் தேடி நீ இந்த மெயிலில் நுழைந்தாய். அநுபவி புது விஷயத்தை. "பெண்மை நலத்துக்கு அணி என்ப நாணம்" என்று அந்நாளில் படித்தாயே. இந்த அநுபவத்தில் நாணம் மங்கியிருக்கிறது; ஆகையால் பெண்மை நலம் இல்லை என்று நீ சொல்வாயா?'

'உண்மையைக் காணச் செய்வதுதான் கல்வி. உண்மையைக் காண்பதற்குப் பொறுமை வேண்டும்' என்று உபதேசித்தது, காதலி சொல்லில் பிறந்த உயர்மதம்.

குறித்த நேரத்தில் 'மெயில்' பெஜவாடா ஸ்டேஷனுக்கு வந்து நின்றது. எனக்கு முன்பே எழுந்து, என் கைப் பையை எடுத்துக்கொண்டு அவள் கீழே இறங்கினாள். மகுடியின் காந்தார லயத்தில் ஒன்றிப்போன நாகத்தைப்போல, நான் அவள் பின்னே சென்றேன்.

அந்த நிலவில், அவள் ஸ்டேஷனை விட்டு நதித்தடத்தை நோக்கிச் சென்றாள். அவளிடத்தில் இருந்த ஒரு கவர்ச்சி - என்னிடம் குடிகொண்டிருந்த ஒரு மயக்கம் - என்னை இழுத்துச் சென்றது.

தனிமையில் அவளைப்பற்றிய எல்லாத் தகவல்களையும் ஒரே மூச்சில் கேட்டுவிட வேண்டும் என்ற ஆவல் என் மனத்தில் குமிழியிட்டது. வாயினின்று, "நீ—?" என்ற ஒரு வார்த்தைதான் வினாவாக வெளிப்போந்தது.

அவள் சற்றும் தயங்கவில்லை. பவழத்தில் பூத்த முத்துப்போலப் புன்னகை புரிந்து, "நான் சாவித்திரி, நீங்கள் சத்தியவான்" என்றாள்.

"அப்படியானால், என்னைக் காக்கத்தான்—"

"அல்ல; என்னைக் காத்துக்கொள்ள. நமக்குக் குறுக்கே நிற்கும் யமனிடமிருந்து உங்களை விடுவித்துத்தான்."

"யமனா? யார்?"

கோலமிட்டதுபோல் சென்ற பாதை வழியே அந்த மோகனாங்கி போய்க் கொண்டிருந்தாள். சட்டென்று கழுத்தை வளைத்து, விழிக்கோணத்தினால் என்னைக் கூர்ந்து நோக்கி, "நீங்கள் எப்போதாவது புனலூருக்கு வந்தது உண்டா?" என்றாள்.

நான் சரசரவென்று ஐந்து வருஷங்கள் பின்னால் நழுவினேன். ஓர் இனிய கனவு போல நிகழ்ந்த அந்தச் சம்பவங்கள் ஞாபகத்துக்கு வந்தன. "ஓ! உன் பெயர் மாலினி அல்லவா? இப்போது ஞாபகம் வருகிறது: அன்று ஒரு நாள் சாயங்காலம் நாம் உலாவப் போனோமே. ஐந்து வருஷங்கள் ஆகியும் நீ விவாகம் செய்துகொள்ளவில்லையா?" என்றேன்.

"காதல் என்பது ஆணின் வாழ்க்கையில் ஒரு பகுதி; ஆனால் பெண்ணுக்கோ காதல் ஒன்றுதான் முழு வாழ்க்கை!"

ஒரு மகாகவியின் வாக்கை அவள் தக்க சந்தர்ப்பத்தில் உபயோகித்தாள். ஐந்து வருஷங்களுக்கு முன்னால் நாங்கள் சந்தித்தோம்; ஒருவரை மற்றவர் விரும்பினோம்; வாழ்க்கையாற்றில் ஒன்றாக - இணையாக - நீந்தத் தீர்மானித்தோம். ஆனால், என் தாய் வற்புறுத்திய வரதக்ஷிணைப் பிரச்னை, அவள் சொல்லியதுபோல, யமனாகக் குறுக்கிட்டது. விவாகம் தடைப்பட்டது. நான் பிரம்மசர்ய விரதம் பூண்டேன். என்னை மாலையோடு பார்க்காமலே, தாய் இரண்டு வருஷங்களுக்கு முன் இறந்து போனாள். பளிச்சென்று எல்லா நிகழ்ச்சிகளும் என் ஞாபகத்துக்கு வந்தன.

கிருஷ்ணா நதியின் தடம் நல்லோர்களின் உள்ளத்தைப்போலப் பரந்திருந்தது. நடுவில் அன்னையின் கருணை வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. நிலவின் ஒளியில் அந்த க்ஷீரப் பிரவாகத்தில் என் மனம் கசிந்து உருகியது. ஆயினும் அதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, "நான் விரதம் பூண்டிருப்பது உனக்குத் தெரியாதுபோல் இருக்கிறது?" என்றேன்.

அவள் துள்ளிக் குதித்து எழும்பி என் திண்டோள்களைப் பற்றினாள். கோபக்கண்களால் என்னைப் பார்த்தாள். கிருஷ்ணாவின் பால்வெள்ளமும் அவளுடைய கோபத்தால் கொதிப்பதுபோலத் தோற்றியது. "கவிமனத்தோடு நான் உங்களைத் தேடி வரவில்லை. 'பாரத நாட்டுப் பெண்மை என்றால் சகிப்புத்தன்மை; கண்ணீர்' என்று ஓரிடத்தில் ரவீந்திரர் கூறினார். எங்கள் சகிப்புத்தன்மையால், பிறந்த நாள்

முதல் சாகும் காலம் வரையில் நாங்கள் கண்ணீர் வடித்தே வருகிறோம். மலைகள் வடிக்கும் கண்ணீர் கடல் ஆகிறது; அந்தக் கடல், மலைகளுக்கு மீண்டும் வடிக்க நீரை வழங்குகிறது. ஆண்களின் அநியாயமோ இன்று எங்கள் சகிப்புத்தன்மையின் கடைசி எல்லையைத் தாண்டிவிட்டது. சிவபிரானைப் பெறத் தவங் கிடந்த பர்வத குமாரியைப்போல, ஐந்து வருஷங்கள் நான் உங்களுக்காகக் காத்திருந்தேன். சென்னையில் இருந்த என் தோழியின் மூலம் உங்களைப்பற்றிய தகவலை அடிக்கடி சேகரித்துவந்தேன். என் பெற்றோர்கள் பிறகு பல இடங்களில் எனக்கு வரன் தேடினார்கள். எந்த இடமும் எனக்குப் பிடிக்கவில்லை. எப்படிப் பிடிக்கும், மனம் உங்களிடத்தில் லயித்த பிறகு? என் உயிர் ஆசை நூலில் ஊசலாடிக்கொண்டிருந்தது. பயங்கொள்ளியாக இருந்து பயனில்லை; சிவனை மிதித்து நடனம் புரியும் காளிகையைப்போல, இனி மாறத்தான் வேண்டும் என்ற சங்கற்பத்தோடு பெற்றோர்களைச் சமாதானப்படுத்திவிட்டுக் கிளம்பினேன். உங்கள் பிரயாணத்தைப் பற்றி அறிந்து, ரெயிலில் தொடர்ந்தேன். எவ்விதத்திலாவது உங்களை மயக்கி வசப்படுத்தி அடைவது; இல்லாவிட்டால், இதோ அமுதப்பாலைச் சுரக்கும் அன்னையின் மடியில்—" என்று அவள் கூறியபோது என் நெஞ்சம் நெகிழ்ந்தது. என் கை அவள் வாயை மூடியது.

அன்று மாலையில் நான் படித்த பத்திரிகைச் செய்தியொன்று கண்முன் நின்றது. இருபது வயசான இளம் பெண் ஒருத்தி, மதுரையில் குளத்தில் நீராட வந்தாள். அந்தப் பருவம் வரையில் அவளைக் கட்டுவோர் யாருமில்லை. படித்த கலைப்பண்புள்ள இளைஞர்கள் பணத்தை முன்னிட்டுப் பேசினார்கள்; உறவினரைச் சாக்கிட்டுத் தப்பினார்கள். பெண்மைக்கு மதிப்புத் தர, பெண்மைக்கு இவ்வுலகத்தில் இயற்கையாக ஏற்பட்ட இன்பவுரிமையை ஒப்புக்கொள்ள, எழைமைக்கும் உலக இன்பத்தில் பங்கு உண்டு என்று சிந்திக்க - எந்த ஆடவனும் முன்வரவில்லை. நாணத்தில் புதையுண்ட அந்த மடமான், பெண்மைக்குச் சமூகம் இழைத்த அநீதியைத் தாங்காமல், அந்தக் குளத்துப் பாசியில் வழுக்கி விழுந்து மூழ்கி மாண்டாள். 'அஜாக்கிரதையினால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக நேர்ந்த மரணம்' என்று நியாய தேவதை தீர்மானித்தது. "அஜாக்கிரதை =விபத்து=மரணம்" என்று சுலபமாக அமைந்துவிட்ட இந்தச் சமீகரணத்துக்குப் பொறுப்பாளி யார்? அந்தப் பெண்ணா, அவளுடைய பெற்றோர்களா, அல்லது நம் சமூகமா? இவ்வாறு பலியான ஜீவனின் ரத்த வெள்ளத்தில் தோய்ந்தும் நம் மனம் கரையாதா?

இந்தச் சிந்தனை என் மனத்தைக் கலைத்தது. மாலினியின் கடுந்தவம் என் விரதத்தைக் கலைத்தது. 'முனிவரான பாராசரைத் தன் ரூபகுண சௌந்தரியங்களின் அபார சக்தியினால் வசீகரித்து, வேதவியாஸரை உலகுக்கு அளித்த மத்ஸ்யகந்தாவைப் போன்ற அழகியர் வாழ்ந்த இந்நாடு; சந்தனுவைப்போன்ற அகண்ட மண்டலாதிபதிகளைப் பொறி கலங்கச் செய்த மோகினிகள் சஞ்சரித்த நாடு; ஒரு ராஜகுமாரிக்குச் சுயம்வரமென்றால், மூலை முடுக்குகளிலுள்ள அரசர்களெல்லாரும் அலறியடித்துக்கொண்டு ஓடிவந்து குவியும் நாடு; கிருஷ்ணனுக்குத் தானே கடிதம் வரைந்து மணஞ் செய்துகொண்ட ருக்மிணியைப்போன்ற ரமணிகள் வாழ்ந்த நாடு - இத்தகைய நாட்டில், மாலினியைப்போல, தம் சௌந்தரிய வெள்ளத்தின் கீழே பணப்பேயை அழுத்திப் புதைக்கும் மங்கைமார் பலர் தோன்றத்தான் வேண்டும்' என்று என் விவேகம் தீர்ப்புச் செய்தது.

சந்திரிகையே விதானமாக விளங்கிய அந்த வானப் பந்தலின் கீழ், கிருஷ்ணையன்னை தன் அலைக்கைகளால் என்னை ஆசீர்வதிக்க, மாலினியின் கரத்தைப் பற்றினேன். 'ஏழு உலகங்களிலும், எந்த ஆபத்திலும் சம்பத்திலும், உயர்விலும் தாழ்விலும், நிறைவிலும் குறைவிலும் இந்த இணைக்கைகளை விடாமல், உறுதுணையாக நிற்போம்' என்று பிரதிக்கினை செய்து, நடக்கலானோம்.

* * *

ஆசிரியர் மூர்த்தியை எங்களை ஆசீர்வதிக்க அழைத்தேன். கதையைக் கேட்ட அவர், "எல்லாம் ரிஷி கர்ப்பமாய்த்தான் முடிந்திருக்கிறது!" என்றார்.

இந்த ரிஷிகர்ப்ப யுகத்தில் - வேகச் சுழலில் - எது எங்கே போய் நிற்குமோ, யார் சொல்ல முடியும்?

# சிந்தனை

## ஜம்புநாதன்

### 1. ஆவணி மாதம்

**ராமக்கௌண்டன் :** பேஷ்! இந்த வருஷம் சரியான காலத்தில் மழை பெய்கிறது. நாற்று நன்றாக வளர்ந்திருக்கிறது. தழைக்குப் பதிலாகக் காந்தி ஐயா சொன்னபடி நஞ்சையிலே போட்ட கொளிஞ்சியும் அவுரியும் தினிக்குப் போதும். அவுரியைத் தொட்டியிலே போட்டா நாலு மணங்கு சரக்கு கிடைக்கும். இப்ப வித்தாலே எண்பது ரூபா வரும். இப்போ என்ன செலவு? பணம் இருந்தால் நாட்டுக்கோட்டையான் பிடுங்குவான். அவதான் - ராமி - தங்கைச்சி பெண்ணு, முழுகாம இருக்கு. தம்பி மகனுக்குப் புதிசாக் கலியாணம். மகளை அழைச்சுட்டு வந்து ஆறு மாச மாச்சுன்னு சொல்லி ஏதாச்சும் செலவு வைச்சுடுவான். தம்பி கோவிந்தன், "இங்கே குடு அப்பா. பழைய மாட்டைச் சந்தைலே தள்ளிட்டு, அதையும் இதையும் சேர்த்து மேற்கே போய் நல்ல வண்டி மாடு கொண்டாரேன்" என்பான். அது நல்ல செலவுதான். வேலைக்கி வைச்சிக்கிட்டு அப்புறம் தள்ளினுக்கூடப் பத்து இருபது லாபத்திலே வித்துடலாம். சின்னப்பயல்னா, சொக்காய் வேணும், புஸ்தகம் வேணும்னு பிச்சுப்பிடுவான். இதெல்லாம் போக, கம்பத்து ரெட்டி ஸொஸைட்டி பணத்துக்கு வழி என்னடாம்பான். ஆகச்சே, சரக்கு ஆனாலும் விக்கப்படாது. 'காந்தி ஐயா' பேச்சைக் கேட்டதுக்கு லாபம் இருந்தாலும், இம்மாங் கஷ்டமுமிருக்கு. ஆமா, அவரு மகாத்மாவே ஜெயிலு ஜெயிலுன்னு சொன்னாரு. டக்குனு மந்திரியும் ராசாவும் வேலை கொடுத்தாரில்லை. அவரு பேச்சைக் கேட்கறதில்லே. கஷ்டமிருந்தாலும் கூடிவருதில்லை? நாத்துக்கூட அவரு சொன்னபடி விட்டிருந்தா —

**ராமக்கௌண்டன் மனைவி :** என்னா இவருக்கு வந்த மௌசு. சதா இந்தக் 'காந்தி ஐயா'வைக் கட்டிக்கினே அழறாரு. அவரு இன்னிக்கித்தானா வந்திருக்கிறாரு? ஊரிலே வந்துதான் பத்து வருசமாச்சே. படியுங்கடா, குடிக்காதிங்கடா, எல்லோரும் ஒண்ணுடான்னு எல்லாம் சொல்லிக்கிட்டுத் திரிஞ்சாரு. இப்பொ, நெல்லு விதை வேணுமா, கம்பு கேவுரு வேணுமா? நஞ்சைலே பில்லைப் போடு, பிஞ்சைலே நெல்லைப் போடுன்னு தலை கீளா அடிக்கிறாரு. இவருந்தானே ஆடறாரு? ஆனா ஒண்ணு, நானு அம்மாம் புள்ளையா இருக்கறச்சே ஐயா வீட்டிலே கட்டி கட்டியா சாயம் எடுப்பாங்க. அப்ப சண்டைலே அதிலே கோடி கோடியா எல்லாம் சம்பாதிச்சாங்களாம். அந்தச் செடி எங்கிருந்தோ சம்பாதிச்சுக் கொடுத்துட்டாரு. இப்போ சண்டைலே அது நல்லா விக்குமாம். இவருகூட பேச்சுக்குப் பேச்சு, "இருடீ, ஐயா பேச்சைக் கேட்டதிலே நம்மூரிலே நானும் மோட்டுத்தெருக் கந்தனுந்தான் அடிக்கப் போறோம் காசு" எங்கிறாரே. அதெல்லாம் சரிதான். காசுவந்ததும், கம்மலை மீட்டுச் சின்னப் பொண்ணுக்குக் குடுத்துடணும். அதுதான் - விருத்தாம்பாள் - இத்தனை வருசம் கழிச்சு உண்டாயிருக்கு. அதுக்கு வீட்டிலே கூட்டியாந்து சேலை எடுத்துக் குடுக்கணும். சின்னப் பயலுக்குக் குப்பன் மகளைப் பிடிச்சுப் போட்டுடணும். கோவிந்தன் சமுசாரம் நல்ல புடவையில்லாமே நிக்குது. அவ அப்பன் வீட்டிலேதான் கையை விரிச்சுட்டாங்களே. நம்ப வீட்டுக்கு வந்தப்பொறம் நாமதானே வாங்கிக்கொடுக்கணும்? இவரு பெரியதனம் பண்ணி எல்லாரையும் ஏமாத்திப்புட்டு கம்பத்தம் வீட்டிலே கொண்டு பணத்தை முடக்காமே பாத்துக்கணம். நாட்டுக்கோட்டையான் வந்தால் அது வேறே.

**மகன் கோவிந்தன் :** அவுரி தொட்டியிலே நாலு மணங்காவது சரக்கு வரும். கூடி வந்தா நம்ம அதிர்ஷ்டம். இப்பவே வடக்கத்தியான் வரானா பாக்கணும். கோடி வீட்டுப் புள்ளையாண்டான் போன மாசமே முப்பது ரூபா விககிதுன்னான். இந்த வருசம் தழை வாங்கிற செலவு இல்லை. அதுக்கு வைச்சிருக்கிற கேவுரு இப்ப விக்கிற விலைக்குப் போட்டா நூறு ரூபா வரும். இதுவும் அதுவும் சேர்த்து ஒண்ணு, அந்தப் பனை மரத்துக்கொல்லை திருப்பணும்; இல்லை, புதிசா ஒரு சோடி மேற்கத்தி மாடு வாங்கிட்டு ஒரு வண்டி கடாவிப்போட்டுடணும். அப்பனும் நானும் இரண்டு தடியனுங்க இருந்திண்டு ஒரு வண்டி வெச்சிட்டு முட்டிக்கிறதா? இப்பத்தான் ஊரிலே வண்டி மாடு இல்லாமை பறக்குது. தினம் ஒரு ரூபாய் காசு கிடைச்சா, குடும்பம் தன்னைக் கட்டிக்கும். வறதை வித்தா கடன் அடஞ்சு போயிடும். பெரியவங்க பணத்தைக் கண்டா சூறையாடிப் புடுவாங்க. தம்பி படிச்சது போதும். ஒண்ணு, அவன் வீட்டிலே இருந்து ஒத்தாசை பண்ணணும்; இல்லை, வேலை கத்துக்கற படிப்பாப் படிக்கணும். இந்தக் கோணை எழுத்துப் படிக்கறதிலே பெருமை மிச்சம். அவன் வெள்ளைச் சொக்காய் போட்டுக்கிட்டுச் சுருட்டுப் பிடிக்கிறது

தான் கண்டது. முடிஞ்சா தீபாவளிக்கு எல்லோருக்கும் துணி வாங்கலாம்.

**மருமகள்:** வீட்டிலே பேசிக்கிறதைப் பார்த்தா இந்த வருசம் எல்லாம் சுகமாக இருக்கும்போலே இருக்கு. செம்மிலிக்கடாவைச் சந்தைலே வித்துட்டு, கூடக் கொஞ்சம் போட்டு நாலு மறி பிடிக்கணும். ஒரு வாத்து வாங்கிட்டாப் போதும். கிடைக்கிற முட்டையை வைச்சிக்கிட்டு வெஞ்சனச் செலவு பாத்துக்கலாம். ஆட்டுக்கிடை பெருகினா பொங்கலுக்கு கோடி எடுத்துக் கட்டிக்கலாம். சின்னத்தம்பி வந்தா பட்டணத்திலேருந்து நல்ல சீட்டியா வாங்கிவரச் சொல்லலாம். உம் - பார்க்கலாம். பணம் மிஞ்சினாத்தானே? பெரியவர் என்ன பண்ணப்போறாரோ. எசமானியம்மா வேறே இருக்காங்க. வீட்டுக்காரர் வேறே மாடு, கன்னும் பாரு. நம்ப யோசனை குடும்பத்துக்கு நாலுகாசு கூடிவரணும்னுதான். யாரு கேக்கறாங்க?

**தம்பி சின்னப்பயல்:** நாலு எழுத்து கத்துக்கணா நல்லதுன்னு பட்டணம் அனுப்பிச்சுட்டாங்க. அப்பாரு ஒழுங்கா எங்கே செலவுக்கு அனுப்புறாரா? ஏதாச்சும் சொன்னா மளிகைக்கடை ஐயாகிட்டே சொல்லியிருக்கேண்டாங்கறாரு. வாரம் ஒரு சினிமாக்கூடப் பார்க்கமுடியறதில்லை. இந்த லீவுக்குப் போனாச் சொல்லிச் சரிக்கட்டணும், எனக்குச் செலவுக்கு நேராப் பணம் அனுப்பாட்டிப் படிக்கமுடியாதுன்னு. ஊரிலே நான் ஒருத்தன்தானே இங்கிலீஷ் படிக்கப்போறவன்?

**படியாள் நல்லான் சாம்பான்:** ஐயா தொட்டிபோடப்போறாராம். அதிலே சரக்குக் கிடைக்கும். இந்த வருஷம் தீனிக்காசு மிச்சம். மோர்க் கொல்லையிலேயும் புலிக்கடிச்சாலேயும் கேவுரு கூடி வந்திருக்கு. மணிலாக்கொட்டை வேறே நாலுபாரம் ஆச்சு. ஆனாப் பாவம், அதைத்தான் அப்படியே செட்டியாரிட்டே கொடுத்து பாண்டைக் கிழிச்சிட்டாரு. காலத்தில் மழை பெய்யறதைப் பார்த்தா, சம்பா கூடி வரும்னு தோணுது. எப்படியாச்சும் சொல்லி ஐயா கிட்டே ரெண்டு பன்னிக்குட்டி வாங்கித் தந்திடச் சொல்லணும். கூட ரெண்டு வாங்கிவிட்டா வாரம் வேணாலும் கொடுத்திடலாம். பொங்கலுக்குக் கவலையில்லாமே தள்ளிடலாம். சின்ன ஐயா காதிலே போட்டு அப்புறம் பெரிய ஐயாட்டே போகணும். அம்மா மாரு - ஐயோ வாண்டாம்.

**கம்பத்தம் ரெட்டியார்:** காலாகாலத்திலே மழை பெய்துட்டது. விலைவாசியும் பரவாயில்லை. இந்த வருஷம் எப்படியாவது பாக்கியில்லாதபடி ஸொஸைடி பணம் வசூலித்தால்தான் நல்லது. இல்லாத போனால் நம்ம கௌரவம் போயிடும். நம்ப காரியங்களுக்கும் இடஞ்சல். ராமக்கௌண்டன் கொஞ்சம் பசையாயிருக்கிறாப்போலத் தெரிகிறது. அவனிட்ட பூராப் பாக்கியும் ஒரேயடியா வசூல் செய்துடணும். ஷேக் காதர் பாக்கியும் வாங்கிட்டா நல்லது. அவர்களுக்கு வேணும்னா புது 'லோன் ஸாங்கிஷன்' செய்கிறேன் என்று சொல்லி வசூலிக்கணும். இந்த வருஷம் விட்டா அடுத்த வருஷம் எப்படியோ? எலக்ஷன் வேறே வருகிறது.

**நாட்டுக்கோட்டை செட்டியார்:** வட்டி வட்டின்னு ராமக்கௌண்டன் தலையை மொட்டையடித்துக்கொண்டே வருகிறோம். நல்ல வேளை; அவன் நம்பிப் போறதில் ரசீது போடாதது நல்லதாச்சு. பாழும் கடன் நிவாரணச் சட்டத்திலே எங்கே முழுகிடப்போறேனோன்னு பார்த்தேன். ராமக்கௌண்டன், "ரசீது மட்டும் இருந்தான்ன, செட்டியார் அசல் துகை அப்படியே கொடுத்துடறேன். என்னாலே பேச்சு மாற முடியாது" என்றது வயிற்றிலே பால் வாத்தது. அவன் மகனும் மச்சானும் பண்ணின ஆர்ப்பாட்டத்திலே நான் பயந்தது அந்த ஈசுவரனுக்குத்தான் தெரியும். இந்த வருஷம் அவனுக்குக் கொஞ்சம் மிச்சம் என்று கேள்வி. கணக்குப் பைசல் பண்ணிப் பிடச் சொல்லணும். அவனுக் கப்புறம் பணம் வசூலிக்கிறதுங்கிறது கல்லிலே நார் உரிக்கிற சமாசாரந்தான்.

**மணியகாரர்:** அப்பா! இந்த வருசம் அலையாமே வசூல் ஆயிடும். இரண்டாம் மாதத்திலே பாதி. மூன்றாம் மாதத்திலே பூஜ்யம் பண்ணிப்பிடலாம். மேலதிகாரிகளுக்கு இந்த வருஷம் பூஜை போட வேண்டாம். ஜமாபந்தி முழிப்புக்கும் தப்பிச்சிக்கலாம்.

## 2. பொங்கலுக்கு முன்பு

**ராமக்கௌண்டன்:** இச்சிலிச்சம்பாவும் மணிலாவும் விளைஞ்சது கஷ்டமாயில்லே போச்சு. விளைஞ்சதுலே எல்லாருக்கும் பொங்கலுக்குக் கைமாத்து, புது நெல்லு கைமாத்துக் கொடுக்கிறதுக்குத்தான் சரியா இருக்கும் போலேயிருக்கு. காந்தி ஐயா பேச்சைக் கேட்டுச் சம்பா போட்டது, பொங்கலுக்கு முன்னே விளைஞ்சு கழுத்தையில்லே அறுக்குது? முத முத வருசத்திலே விளைஞ்சதே தொம்பையிலே கொட்டறதா, எல்லாருக்கும் பங்கிடறதா? அட குடுக்கத்தான் வேணும்! புது நெல்லு பொங்கப்படின்னா

ஒவ்வொருத்தனும் கலம் ஆறு மரக்கால்னு கேட்கிறானுவ! ஏதோ இரண்டு மரக்கால் ஒரு மரக்கால் போட்டுப் பொங்கப்பானை செஞ்சா......அட இழவே! நாட்டுக்கோட்டையான் வேறேன்னு நெல்லுக் கேட்டு இருக்கான். எல்லாம் என் மவன் தர்பார்னு டபாய்த்துக்கிட்டேன். அவன் கண்டிப்பு எனக்கு வராது. இந்த நாட்டுக்கோட்டையானுக்கு என்ன பண்ண? இந்தச் சமயததிலே யோசனை சொல்ல 'காந்தி ஐயா' கூட ஊரில் இல்லே.

**ராமக்கௌண்டன் மனைவி:** மணிலாக் கொட்டை வித்துப் பணத்தை முடிச்சு வைச்சிருக்கான் கிழவன். அந்தக் கம்மலை மீட்டு அதோடே நாலு கலம் நெல்லும் பொங்க வரிசையும் சின்னப் பொண்ணுக்கு அனுப்புன்னு பெரிய தம்பியைக் கேளுங்கிறானே! அடேயப்பா! தலையிருக்க வாலாடுமா? என் குடித்தனத்தை இந்த வாண்டா சமாளிச்சு நடத்திடுவான்? சரி, சரி.

**மகன் கோவிந்தன்:** ஐயோ! இந்தக் கிழவன் தர்பார் பொறுக்க முடியல்லே. கையிலே காசு வைச்சுக்கிண்டு பார்த்துப் பார்த்து ஏங்குறான். சட்டுப்புட்டுன்னு செலவு செய்துடுன்னு கேட்கறதில்லை. கிழவியும் தினம் ஏதாவது செலவு சொல்லி நச்சு நச்சுன்னு ஒண்ணுமிரண்டுமா கிழவன் கைக்காசைக் கரச்சுப்பிடறா. கடனும் அடைய மாட்டேங்கிறது. வீட்டுச் செலவும் உருப்படல்லை. சரி, இன்னிக்கி நாட்டுக்கோட்டையான் கணக்கை மாமனை வச்சிக்கிட்டுப் பைசல் பண்ணி அப்பாரிட்டேருந்து பணத்தை வாங்கிக் கொடுத்துப்பிடணும். கம்பத்தம் கிட்டே கணக்குக் கேட்டா, பணத்தைக் கொண்டா பார்த்துக்கலாம்னு அமத்துவாரு.

**மருமகள்:** வாத்து முட்டை வித்துச் சேகரிச்ச காசுக்குக் கம்மலை மூட்டணுமாமே. கிழவன் காசே எங்கேயோ போயிடுச்சாம். ஊசிலே குத்தி சேகரிச்ச காசு வேணுமாம் கிழவிக்கு. ரகளை பண்றாளே. ஒத்துமையா இத்தனை வருசம் நான் குடித்தனம் நடத்தாதபோனா இவங்க எல்லாம் சந்தியிலே நிக்கணும். இன்னிக்கி என்னை விரட்டறா கிழவி. அதோ ஆடெல்லாம் பிடிச்சுட்டுச் சந்தைக்குப் போடான்னு மகனை வேறே உலுப்பிக்கிட்டிருக்கிறா. உம்; நன்னியில்லாத ஜன்மங்க. இவரும் தலை மாட்டுறாரு.

**கம்பத்தம்:** என்ன அநியாயம்! விறைப்பா வந்து கணக்குக் கேட்டான். பணம் கொண்டான்னேன். கம்முனு செட்டி கடனை அடைச்சு நிலத்தை மீட்டுட்டானே. சரி, இவன் கொடுக்க வேண்டிய வாய்தா தீந்து ஒரு வருஷமாச்சு. பேசாமே டிக்ரி வாங்க வேண்டியதுதான்.

**நாட்டுக்கோட்டை செட்டி:** அட பாவி! என்னை மிரட்டியல்லா பசங்க கணக்கைத் தீத்துப்புட்டாங்க. கௌண்டன் கண்ணிலே தென்படவேயில்லை. கொஞ்சம் முரண்டினா கோர்ட்டுக்குப் போகணும் போல இல்லே வந்துடுத்து. கௌண்டன்டே நேரே கணக்குத் தீர்த்திருந்தா இந்த நூறு ரூபாய் நஷ்டமில்லையே. பாவிங்க வந்து மடக்கிட்டானுங்களே. உம்; சரி, சரி; குப்பக்கௌண்டனுக்கு இவன் ஜாமீன் போட்டிருக்கானே, அதைப் பைசல் பண்ணுட்டி கோர்ட்டிலே போட்டுடுவோம். இந்த ரூபாயைக் கொடுத்தா ராஜி. இல்லை, ஒரு கை பாத்துடுவோம்.

**தம்பி சின்னபயல்:** ஏது பேசாமெ மூட்டையைக் கட்டிக்கினு ஊர் திரும்ப வேண்டியதுதான். அண்ணன் தர்பாரிலே நம்ப கைவரிசை பலிக்காது. ஆனா அண்ணி படிக்கட்டுங்கிறாளே.

## 3. மாசிமாதம் ஆரம்பம்

**ராமக்கௌண்டன்:** அட கடவுளே, வருச ஆரம்பத்திலே நான் கட்டின கோட்டை இப்பொ தூள்தூளாப் போச்சுங்களே! ஐயா சொல்வாங்களே: "கௌண்டரே, விளைஞ்சதுன்னு சந்தோசப்படாதே, கஷ்டம் வந்ததுன்னு தலைலே கைவச்சுக்கிட்டு அழாதே. இதுதான் கடவுள் செயல் என்று ஒரே மனசோட பாடு படு. முயற்சி நமது. பலன் கொடுக்க வேண்டியது அவன் பாரம்." எத்தனை தடவை இந்த மாதிரி சொல்லியிருக்கிறாரு. அவரும் தெய்வ சம்மதம் தெய்வ சம்மதம்னுதான் நாளை ஓட்றாரு. நல்ல வேளையா, தம்பி முனைஞ்சு பனைமரத்துக் கொல்லையை மூட்டினான். கேவுரு வித்து வாய்தா கட்டிட்டா இருக்கிற நெல்லு ஆறு மாசத்துக்குப் போதும். அதுவரை குந்திக்கிட்டா உட்காந்திருக்கப் போறேன்? கன்னி வளைவுலே ஆறு மாசத்துப் பருத்தியும் சன்னாசி மூலேலே கேவுரும் மணிலாவும் போட்டுட்டு அந்தக்கொம்புவளைஞ்சான் கோடியெ கவலைலே பூட்டிட்டா ஆடி மாசத்திலே ஆண்டவன் முந்நூறு ரூபாய் கொட்டமாட்டானா? பாப்பம். இத்தனை வருசமா ஊரிலே நல்ல பேரெடுத்துக் காலத்தைத் தள்ளிப்புட்டேன். இப்பொ ரெட்டி ஸொஸைடி பாக்கிக்கு டிக்ரி வாங்கப் போயிருக்கான். செட்டி அந்த ஜாமீன் போட்டதிலே என்னையும் சேர்த்துக் கோட்டுக்கு இழுக்கிறான். சரி சரி,

எல்லாத் தொல்லையும் தம்பி தலைலே போட்டுட்டு நான் சிவனேன்னு குந்திக்கிறேன். இந்தப் பாளும் காத்து வராட்டி நான் ராசால்லை! உருவி உருவியில்லா பயிரைக் கொட்டிடுத்து? மழை வேறே சேந்துக்கிட்டு அந்த மூலை அடைச்சானை உடைச்சு பாழாக்கிட்டுது! உம். நாம்ப குடுத்து வைச்சதுதானே கிடைக்கும்? அதிகமா ஆசைப்பட்டா?

**கௌண்டன் மனைவி:** ஐயோ, அடிச் சிக்கிட்டேன் நான். அந்தக் கம்மலை மூட்டுப்புடுங்கோ; இன்னும் நம்ப சனத்துக்குச் செய்ய வேண்டிய வரிசைகளை நல்லாச் செய்துப்புடுங்கோ. எனக்கு ஒரு ஐம்பதுலே ஒரு சேலையும் மருமகளுக்கு ஒண்ணும் வேணும்னேன். அந்த வெட்டாதுட்டி, இந்தக் கடன்லே எனக்கு வேண்டாம் சேலைன்னு என் வாயில்லேயும் மண் போட்டாச்சு. கிழவன் எல்லாம் சம்பா அறுவடையாகட்டும்னு வாயிதாப் போட்டான். அவன் பண்ணற கஞ்சத்தனம் கடவுளுக்குப் பொறுக்கல்லை. காத்தும் மழையும் விட்டுக் கதிரை உருவிக்கினு போகச் சொல்லிட்டாரு.

**மகன் கோவிந்தன்:** நல்ல வேளை. இந்த வருசம் நான் குடும்பத்திலே கடுமையாயிருந்ததிலே தலை தப்பிச்சது. அவளும் கொஞ்சம் கரிசனமாத்தான் இருந்தா. அதிலே பெரியவங்களுக்குக் கூடக் கொஞ்சம் வாங்கு. என்ன பண்றது? காலம் மாறிப்போச்சே? ஊரிலே பெரிய மனுசன், கணக்குக் கேட்டால் சொல்லாமே இப்பொ டிக்ரி வாங்க முனையறான். அவன் எண்ணத்தை என்ன சொல்ல? செட்டி ரூபாய் தள்ளிக்குடுத்துட்டு அப்பாரெ அமுக்கப் பார்க்கறான். காத்து மழை வேறே நம்ம தலைலே கைவைச்சுடுச்சு. என்ன பொழைப்பு? படிச்சவங்க கிராமத்துக்குப் போங்க, விவசாயம் செய்யுங்கன்னு எல்லாம் பேப்பர்லே போடறாங்க. இங்கே வந்து பார்த்தால்ல தெரியும், குடித்தனக்காரங்க பொழைப்பு? நம்ம உழைச்சாலும் காத்து மழை வெயில் எல்லாம் சேர்ந்தில்லை கெடுத்துடுத்து? ஒண்ணு; காஞ்சு கெடுக்குது, இல்லாட்டி பேஞ்சு கெடுக்குது. எல்லாம் ஆண்டவன் செயல். பின்னே குடுக்கிறதே நமக்கு முன்னே கொடுத்துடுத்து. வருச வருமானம் கிடைச்சுப் போச்சு. அதிகம் வருமுன்னு ஆசைப் பட்டது அரோகரா! தள்ளு சவத்தை. ஆயுசோடெ இருந்தா ஒழைச்சு சம்பாதிச்சுடறோம்.

**மருமகள்:** அவரு எல்லாரு பேச்சையும் தட்டிட்டுச் செஞ்ச காரியத்திலே குடும்பம் மிஞ்சித்து. வாத்துப்பட்டியை வித்ததுலே பதினைஞ்சு ரூபாய் லாபம். ஆட்டுக் கிடையிலேதான் ரெண்டு குட்டி செத்துப் போச்சு. இருந்தாலும் அதிலே ஒரு ஐஞ்சு. உம். இப்படிக் குடுத்துப்புட்டு ஐயனாரப்பன் சம்பா வாயிலே மண்ணு போட்டுட்டானே. இஞ்சி லாபம் மஞ்சள்ளே. ஆனா ஒண்ணு லாபம். பெரியவங்க குடும்ப பாரத்தை நம்ப தலைலே போட்டுட்டாங்க. ஒண்ணுமில்லைனாலும் கவலை மிஞ்சும்.

**மணியகாரன்:** ஊர் வளத்தைப் பார்த்து அலையாமே வாய்தா பூஜ்யம் பண்ணிடலாம்னு சந்தோஷப்பட்டேன். இந்தக் காத்து நம்ம அலைய வைச்சுடுத்து. நம்ம நிழல் காலடிலேதானே?

**கம்பத்தம் ரெட்டி:** என்னடாது, இத்தனை வருஷம் குடித்தனம் பண்ணியும் இந்த ஊரிலே நம்ம பேச்சு தாழல்லெ. இப்பொ இந்த ராமக் கௌண்டன் மகனண்ட நம்ப ஜம்பம் சாயாது போலல்ல இருக்கு. டிக்ரி ஆச்சு. காவிலே விழுவான்னு பார்த்தா, மாட்டை வித்துப் பணத்தைக் கட்டிப்பிட்டானே. அதோடே, "சாமி, இன்னும் மூணு மாசம் வெட்டிலே தவிடும் பருத்திக் கொட்டையும் போட்டு மாட்டைக் கொட்டடிலே கட்டணுமேன்னு நினைச்சேன். உங்க புண்ணியத்திலே அதுவும் மிச்சம், கடனும் அடஞ்சதுங்க"ன்னு சொல்லி, பத்துப் பேருக்கு நடுவிலே நம்ப மானத்தை வாங்கிப்பிட்டானே.

**நாட்டுக்கோட்டை செட்டி:** அட எழவே! உடும்பு வேண்டாம் கையை விட்டாப் போதும்னு இருக்கே. இந்த ராமக்கௌண்டனை எப்படியாவது அமுக்கிப்பிடணும்னு பார்த்தா அவன் மகன் நம்மையே அமுக்கப் பார்க்கிறானே. சின்னப் பயலாயிருந்தாலும் சுட்டி. இவனண்டை நாம்ப ஒழுங்காப் போகல்லேன்னா மானம் போயிடும். குப்பனை வைச்சுக்கிட்டு ராஜி பண்ணிக்கத்தான் வேணும்.

**தம்பி சின்னபயல்:** பட்டணத்துக் கடையைக் கட்டிக்கிட்டு வந்துட வேண்டியதுதான். அண்ணன்கிட்டே ராசியா இருந்தா எப்பனாச்சுமாவது சினிமாவுக்குப் போகலாம். "அந்தக் குளத்து மேட்டைச் சீர் பண்ணறேன். காய்கறி போட்டு வித்துக்கோ. உன் செலவுக்கு அந்தக் காசு" இன்னுட்டான். அவன் பேச்சைக் கேட்டா அண்ணி கூடப் பிரியமா இருப்பா. நமக்கும் ரெண்டு காசும் கிடைக்கும்.

---

# களத்திர தோஷம்

'மாயாவி'

(சென்ற இதழ் 38-ஆம் பக்கத்தொடர்ச்சி)

கங்கைகொண்டான் சேஷிப்பாட்டியைப் பார்த்தால் சூனியக்காரி மாதிரி இருக்கும். மருத்துவம் பார்ப்பது, விசேஷ வீடுகளுக்குச் சமையல் செய்து போடுவது, உபாதானம் எடுப்பது இவைகள் அவள் வயிற்றுப் பிழைப்புக்கான தொழில்கள். ஆனால் வரும்படியுள்ள இந்தத் தொழில்களைக் காட்டிலும் வரும்படி இல்லாத கோள் சொல்லும் தொழிலில்தான் அவள் பிரசித்தி பெற்றிருந்தாள். நாரதரே கலியுகத்தில் இப்படி ஸ்திரீ ரூபத்தில் பிறந்திருக்கிறாரோ என்று அவ்வூரார் சந்தேகப்படுவதுண்டு. ஆனால் நாரதருக்கும் இவளுக்கும் ஒரே ஒரு வித்தியாசம்: நாரதர் கோள்கள் முடிவில் சுபமாக இருக்கும். சேஷிப்பாட்டியின் கோள்களோ முடிவில் விபரீதத்திலே வந்து நிற்கும்.

கையில் செம்புடன் காலையில் உபாதானத்திற்குக் கிளம்பினாளானால், ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு சமாசாரத்துடனே செல்வாள். இவ்வாறு கிராமத்திலுள்ள பல சண்டைகளுக்கு அவளே காரணமாய் நின்ற போதிலும், கங்கைகொண்டான் ஸ்திரீகளில் ஒருத்திக்காவது அவளிடம் விரோதம் இல்லை. ஏற்கனவே பிறர்வீட்டு விஷயங்களைக் கேட்பதில் ஒரு தனி ஆர்வம் கொண்ட நம் ஸ்திரீகளுக்கு அவள் புதப் புதுச் செய்திகளைக் கொண்டு வந்து தள்ளும்போது அவளை எவ்வாறு விரோதித்துக்கொள்ள முடியும்? அப்படி யாராவது தவறி அவளிடம் விரோதம் பாராட்டினாலும் சேஷிப்பாட்டி அவர்களுக்கு இதமாக எதாவது சொல்லி, சிநேகப்படுத்திக்கொண்டுவிடுவாள். மொத்தத்தில் கங்கைகொண்டான் ஸ்திரீகளுக்குச் சேஷிப்பாட்டி இன்றியமையாதவளாகவே இருந்துவந்தாள். இவ்வாறு சேஷிப்பாட்டியிடம் மோகம் கொண்டவர்களுள் கோமதியும் ஒருத்தி.

கோவு தன் மனைவியின் தூண்டுதலின் மேல், தங்கள் ஜாதகங்களைப் பிரசித்தி பெற்ற ஜோஸ்யர் ஒருவரிடம் காட்டி, அவர் போதனைப்படி குடும்ப தோஷ பரிஹாரத்திற்காகச் சில ஹோமங்களும் பிராம்மண சமாராதனை முதலியவைகளும் செய்வதென்று தீர்மானித்தான். இது சம்பந்தமான எத்தனங்களில் ராமலிங்கமையரும் கோமதியும் தலைமை பூண்டிருந்தனர். ஹோமத்தையும் மந்திர கர்மாக்களையும் நடத்திவைக்க மலையாளத்திலிருந்து ஒரு மாந்திரிகன் வரவழைக்கப்பட்டிருந்தான்.

ஹோமம் ஆரம்பிப்பதற்கு முந்திய நாள், சேஷிப்பாட்டி ஒரு விசேஷ சமாசாரத்துடன் கோமதியம்மாளிடம் ஓடோடியும் வந்தாள். "கேட்டாயாடி கோமதி, சமாசாரத்தை? பிள்ளையார் பிடிக்கக் குரங்காய்விட்டதே உன் கதை!" என்று தொடங்கினாள்.

"என்ன விசேஷம் சேஷிப்பாட்டி? யாருக்கு என்ன வந்துவிட்டது?" என்று கோமதியம்மாள் கேட்டாள்.

"எல்லாம் உன்னையேதான் சுற்றிப் பிடித்திருக்கிறது. எல்லோரையும் 'பாம்' என்று நம்பியிருக்கிறாயே. உன் தலையிலே கல் விழ இருந்ததே. சேஷிப்பாட்டி காதில் சமாசாரம் விழுந்ததோ தப்பினாயோ?"

"என்ன பாட்டி? சொல்லுங்கோ. என்னைத் தவிக்க விடாமல் விஷயத்தைச் சொல்லுங்கோ பாட்டி."

"அடியம்மா, இப்படியும் செய்யத்தான் ஒரு பிள்ளைக்கு மனசு வருமா? எண்டி, ஸ்டேஷன் மாஸ்டர் சங்கரையரைத் தெரியுமோல்லியோ, அவர் பாலக்காட்டுக்காரர். அவருக்கு இந்த மாந்திரிகனை நன்றாகத் தெரியுமாம். அவர் வீட்டில்தான் அவன் தங்கியிருக்கிறான். அவனே உண்மையையெல்லாம் சங்கரையரிடம் சொல்லிவிட்டானாம். எண்டியம்மா, இந்தக் காலத்துப் பிள்ளைகள் எதற்கு வேண்டுமானாலும் துணிந்துவிடுவார்கள்போல் இருக்கிறது. ஆனால் உன் மாப்பிள்ளை பாலுவுக்கு விஷயம் தெரியாதா என்ன? தெரிந்

திருந்தால் எப்படித்தான் அவன் மனம் ஒப்பினான்?"

"விஷயத்தைச் சொல்லுங்கோ பாட்டி."

"சொல்கிறேண்டியம்மா. சொல்லத் தான் வாய் வருகிறதா? நீ எப்படியடி உன் கண்மணியைப் பிரிந்திருப்பாய்? இதைக் கேட்டவுடன் நானே பதறியடித்து ஓடி வந்தேனே; நீ எப்படியடியம்மா சகிப்பாய்?"

"சொல்லுங்கோ பாட்டி. என் ருக்குவுக்கு என்ன?"

"என்னவா, குடும்ப தோஷத்திற்கு அவளைப் பலியிட்டு...!"

"ஹா! என்ன?"

"ஆமாண்டியம்மா ஆமாம், கேளு."

"யார் உங்களுக்கு இதையெல்லாம் சொன்னது?"

"அம்மம்மா, நான் மாட்டேண்டியம்மா. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்ல மாட்டேன். அதிலேயும் பெரிய கத்துக் காரியங்கள். நாளைக்குச் சேஷிப்பாட்டி இரண்டு அரிசி பிச்சையெடுப்பதும் போய்விடும். உள்ளபடி, நான் இப்பொழுது பிறர் காரியத்தில் தலையிடுகிறதே இல்லை. இருந்தாலும் உன் விஷயம் என்றதும் மனசு கேட்கவில்லை. ஓடோடியும் வந்தேன்."

"அப்புறம் என்ன, சொல்லுங்கள் பாட்டி."



"...ஹோமகுண்டத்தின் முன் சாய்ந்துவிட்டாள்."

"அந்த வீடு கட்டுவதற்கு முன்னால் முற்றத்திலே ஒரு புளிய மரம் இருந்ததாம். அதிலே ஒரு யக்ஷிணி வாசம் செய்து வந்ததாம். வீடு கட்டுவதற்கு அந்த மரத்தை வெட்டப் போகும்போது, அது ஒரு ஸ்திரீ பலி கேட்டதாம். அதைக் கவனியாமல் அவர்கள் வீட்டைக் கட்டினார்களாம். அதனால் அந்த யக்ஷிணி ஏழு தலைமுறையாகக் கரையேற்றப்படாமல் அலைந்து கொண்டிருக்கிறதாம். இப்பொழுது எட்டாவது தலைமுறையில் அது இவர்கள் சந்தான விருத்தியைத் தடைப்படுத்தியிருக்கிறதாம். அதற்காக ஹோமம் சாந்தி ஏதேதோ செய்வதுபோல, மந்திர சக்தியினாலே உன் பெண்ணை அதற்குப் பலி கொடுக்கப் போகிறார்களாமடி!" சேஷிப்பாட்டி இவ்வாறு கூறி விட்டு, இரண்டு சொட்டுக் கண்ணீரையும் சிந்தினாள்.

"போதும் பாட்டி, கேட்கச் சகிக்கவில்லையே! இப்படியும் இந்தக் காலத்திலே செய்வார்களா பாட்டி? இது யாரோ கட்டிவிட்ட கதை மாதிரியன்றோ இருக்கிறது?"

"கதையோ, உண்மையோ, எனக்குத் தெரியாதடியம்மா. நான் கேட்ட முழு சமாசாரத்தையும் சொல்லிவிடுகிறேன். உன் பெண்ணை இந்த மாந்திரிகன் பார்த்தானாம். ஏராளமான பணம் கொடுத்து விஷயம் ரகசியமாயிருக்க ஏற்பாடு செய்திருந்தபோதிலும், உன் பெண்ணின் பொலிவையும் சாந்தத்தையும் கண்டு மனசு வராமல், எப்படியாவது அவளைத் தப்புவித்துவிட, இந்தப் பூஜை முடியுமட்டும் அங்கிருக்க விடாமல் அழைத்துப் போய்விட வேண்டுமென்றும் சொன்னானாம். ஏண்டியம்மா, உன் பேரிலுள்ள அபிமானத்தினாலே தப்போ சரியோ, என் காதில் விழுந்ததைச் சொல்லிவிட்டேன். நாளைக்குச் சேஷிப்பாட்டியின் தலை வெளியில் உருளாமல் மட்டும் நீ பார்த்துக்கொள்."

சேஷிப்பாட்டிக்கு இந்தச் சமாசாரம் யார் கூறினார்களோ, எங்கிருந்துதான் கிடைத்ததோ தெரியாது. ஆனால் அவள் கோமதியின் உள்ளத்தில் ஒரு பெரும் புயலைக் கிளப்பிவிட்டாள்.

கோமதியின் மனம் அலை பாய்ந்தது. 'இப்படியும் நடக்குமா?' என்ற சந்தேகம் இருந்தபோதிலும், சேஷிப்பாட்டியின் சமாசாரத்தில் சிறிதாவது உண்மை இருக்க வேண்டும் என்றே அவளுக்குத் தோன்றியது.

சமாசாரத்தை உடனே அவள் தன் கணவரிடம் கூறினாள். ராமலிங்கமையருக்குப் பிரமாதமான கோபம் வந்துவிட்டது. "ஏண்டி, உன் மட்டித்தனத்திற்கு எல்லையே கிடையாதா? யாரோ என்னவோ சொன்னார்களென்று இதை

யெல்லாம் பறையடித்துக்கொண்டு திரிகிருயே. வாயை மூடிக்கொண்டு வேலையைப் போய்ப் பார்" என்று அவளைக் கடிந்துகொண்டார்.

கோமதிக்கு என்னவோ நிம்மதி இல்லை. இரவு மறுபடியும் இவ்விஷயத்தைத் தொடங்கிவிட்டாள். "என்னை முட்டாள் என்ருே பைத்தியம் என்ருே, என்ன வேண்டுமானுலும் சொல்லிவிட்டுப் போங்கள். ஆனல் உங்கள் காலில் விழுந்து கேட்டுக்கொள்ளுகிறேன். என் மனசு சமாதானப்பட, தயவு செய்து நாளைக் காலையில் ஸ்டேஷன் மாஸ்டர் சங்கரையரைக் கண்டு இதைப்பற்றிக் கேட்டுவிட்டுத்தான் வரவேண்டும்" என்று மன்ருடினுள்.

ராமலிங்கமையருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "அடி மௌடீகமே, உன்னைக் கட்டிக்கொண்டு இழவெடுக்க வேண்டியிருக்கிறதே! இதையெல்லாம் எப்படியடி அந்த மனிதனிடம் நான் போய்க் கேட்பது? விஷயம் அவர்களுக்குத் தெரிந்தால் ருக்குவின் கதி என்ன ஆகும்? எங்கிருந்தோ ஒரு சனியனை விலைக்கு வாங்கிக்கொண்டு வந்து, இருக்கிறவன் கழுத்தை அறுக்கிருயே?" என்று கத்தினுர்.

கோமதிக்கு அழுகைதான் வந்தது. கணவன் தன்னைக் கோபித்துக்கொண்டதற்கல்ல; அவள் மனத்தில் சேஷிப்பாட்டியின் வார்த்தைகள் ஆழமாக வேரூன்றிவிட்டன. இன்று விஷயத்தை விசாரிக்காமல் இருந்துவிட்டு நாளைக்குத் தன் பெண்ணுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்துவிடக்கூடாதே; கணவரும் பிடிவாதமாக இதை விசாரிக்க மாட்டேன் என்கிருரே என்றதுக்கந்தான் அது.

இரவு முழுவதும் அழுது கதறிக் காரியத்தைச் சாதித்தே விட்டாள். மனைவியின் முட்டாள்தனமான தீர்மானத்தையும் பிடிவாதத்தையும் பொறுக்காதவராய், ராமலிங்கமையர் தலையில் அடித்துக்கொண்டு, காலையில் சங்கரையரைக் கண்டு இதைப்பற்றிக் கேட்டார். சங்கரையர், இது யாரோ விரோதத்தின் மேல் கட்டிய கதையென்றும், அந்த மாந்திரிகன் ஒருபோதும் இம்மாதிரியான காரியங்களில் ஈடுபட மாட்டானென்றும், வம்பர்களின் வார்த்தைகளை நம்பித் தடபுடலாக ஏதும் செய்துவிட வேண்டாமென்றும் சொல்லி அனுப்பினுர்.

ராமலிங்கமையருக்கு அவமானமாய்ப் போய்விட்டது. வீட்டிற்கு வந்ததும் தம் மனைவியைக் கண்டவாறு பேசி, இனி இம்மாதிரி அசம்பாவிதமான வார்த்தைகள் எவைகளையாவது தம் காதுகளில் போட்டால், வீட்டை விட்டு ஓடி விடுவேதாகப் பயமுறுத்தினுர்.

கோமதியின் தாபம் என்னவோ தீரவில்லை. எச்சமயமும் அவள் தன் மகளின் உயிருக்கு ஆபத்தையே எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். ஸ்டேஷன் மாஸ்டரையும் கோவு கைக்குள் போட்டுக்கொண்டிருப்பானென்று அவள் நம்பினுள். "அவள் தலையெழுத்து இப்படியும் இருக்க வேண்டுமா? எப்படியாவது வீட்டிற்கு அழைத்து வந்துவிடுவோம் என்ருல், இத்தனை முரண்டு பிடிக்கும் புருஷர் அதற்கு இடம் கொடுப்பாரா? ஐயோ ஈசுவரி, நீதான் அவள் உயிரைக் காப்பாற்ற வேண்டும்" என்று ஏதேதோ புலம்பிக் கொண்டே இருந்தாள்.

* * *

கோமதியின் மனக் கவலையை மிகைப்படுத்திக் காரியங்களைப் பிரதிகூலமாக்க ஒரு சம்பவம் இரண்டு நாட்களில் நிகழ்ந்துவிட்டது. மேலும், அச்சம்பவம் எவ்வளவோ விசால புத்தி படைத்த ராமலிங்கமையரின் கண்களையும் கட்டிவிட்டது.

ஹோமம் முதலியவைகள் மிகவும் விரிவான நடையில் செய்யப்படுவதாகக் கேள்விப்பட்டுச் சுற்றுப் பக்கத்துக் கிராமங்களிலிருந்து அதிதிகள் கங்கைகொண்டானில் வந்து கூடினர். ஹோமம் நடக்கும் எட்டு நாட்களும் அதிதி பூஜை செய்யப்படுவதாக அறிவித்திருந்ததால் ஜனக்கூட்டம் அதிகமாக இருந்தது. கோவுவும் பாலுவும் இவைகளுக்கெல்லாம் சந்தோஷத்துடன் பணச் செலவு செய்யத் தயாராக இருந்த போதிலும், அவர்கள் மனைவியர் இருவருக்கும் ஒய்வு ஒழிவு இல்லாமல் வேலை இருந்தது. சமையல் வேலைகளைச் செய்யவும், மற்றக் காரியங்களைக் கவனிக்கவும் ஆட்களை ஏற்படுத்தியிருந்த போதிலும் அவர்களுக்குத் தேவையான வீட்டுச் சாமான்களை எடுத்துக் கொடுப்பதற்கும் அவைகளை விரயம் செய்யாமல் கவனிப்பதற்கும் அச்சிறு பெண்கள் இருவரும் ஓய்வில்லாமல் ஈடுபடவேண்டியிருந்தது. மேலும் ஹோமம் பூஜை முதலியவை நடக்கும் போது சில கட்டங்களில் அவர்களிருவரும் புகையில் வேறு உட்கார்ந்திருந்து கஷ்டப்பட வேண்டியதாயிற்று. மொத்தத்தில்

இவ்விசேஷத்தை நடத்துவதற்கு மீனாக்ஷியும் ருக்மிணியுந்தான் தூக்கமின்றிக் கஷ்டப்பட்டார்கள்.

மீனாக்ஷிக்கு அப்பொழுது இருபது வயசுதான். இருந்தாலும் அவள் உடல் நிலை இந்தக் கஷ்டங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு போகக்கூடியதாக இருந்தது. ஆனால் ருக்மிணியின் தேக ஆரோக்கியம் அவ்வளவு திடமாக இருக்கவில்லை. எற்கனவே அவளுக்கு ஒற்றை நாடிச் சரீரம். அதிலும் அதிகமான வேலை. இரவு முழுவதும் தூக்கம் இல்லை. பூஜை முதலிய காரியங்களில் ஈடுபடவேண்டியிருந்ததால், வேளையில் ஆகாரம் இல்லை. எப்படியோ சகித்துக்கொண்டு முதல் நாளைத் தள்ளிவிட்டாள். இரண்டாவது நாள் பகற் பொழுதும் கழிந்தது. அன்று மாலை முதல் அவள் உடல்நிலை சரியாக இல்லை. அதனோடு ராத்திரி ஹோமத்தில் உட்காருவதற்காக மாலையில் ஸ்நானமும் செய்தாள். உடற் கோளாற்றை வெளியில் காட்டாமல் பாலுவுடன் ஹோம குண்டத்தின் முன் வந்து உட்கார்ந்துவிட்டாள்.

புகையும் சூடும் அவள் கண்களையும் தேகத்தையும் எரித்தன. அவளால் தலை நிமிர்ந்திருக்க முடியவில்லை. இருந்தாலும் பூஜையின் மத்தியில் எப்படி எழுந்திருப்பதென்று சகித்துக்கொண்டிருந்தாள். அத்தனை உபாதையையும் சகித்துக்கொண்டுவிட வேண்டுமென்ற உறுதி இருந்தாலும் தேகஸ்திதி ஒத்துப் போகவில்லை. ஒரு நிமிஷந்தான். என்னவோ செய்கிறதுபோல இருந்தது. கண்களை இருட்டியது. சமாளித்துக்கொள்ளுமுன்பே ஹோம குண்டத்தின் முன் சாய்ந்துவிட்டாள்.

“ஐயோ பெண்ணே, மோசம் போய்விட்டேனே!” என்ற அலறல், மந்திர சப்தங்களையெல்லாம் பொத்துக்கொண்டு எதிரொலித்தது. எங்கிருந்துதான் பார்த்துக்கொண்டிருந்தாளோ, கோமதி அவ்வளவு கூட்டத்தையும் ஒரே எட்டில் தாண்டி ருக்குவினிடம் ஓடி வந்தாள்.

ராமலிங்கமையரும் அங்கேதான் பூஜையைக் கவனித்துக்கொண்டிருந்தார். அவரும் ருக்மிணியிடம் ஓடி அவளை ஹோம குண்டத்தின் முன்பிருந்து தூக்கிக்கொண்டார்.

கோவு, பாலு, மீனாக்ஷி எல்லோரும் மனம் பதறிவிட்டனர். அவர்களும் எழுந்து போய் ருக்குவைக் கவனிக்க விரும்பிய போதிலும், பூஜையின் நடுவே எழுந்திருப்பது கூடாதென்று உட்கார்ந்திருந்தனர்.

ராமலிங்கமையர் ருக்குவைத் தோளில் சாய்த்துக்கொண்டு பூஜைக் கூடத்தைக் கடந்து வெளியே வந்தார். வீடு முழுவதும் ஒரே புழுக்கமாகவும், புகை சூழ்ந்தும் இருந்தது. ஆகவே அவர் ருக்குவை அதே வரிசையில் சில வீடுகளுக்கு அப்பாலிருந்த தம் வீட்டிற்குக் கொண்டுபோக வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து கோமதி அழுதுகொண்டே வந்தாள். சில வேண்டிய மனிதர்களும் அவரோடு வெளியே வந்தனர்.

வெளியே ‘ஜில்’லென்ற காற்று வீசியது. நாலைந்து வீடுகள் கடந்து போவதற்குள் ருக்கு பிரக்ஞையடைந்து விட்டாள். உடம்பில் எற்பட்டிருந்த பலஹீனம், அவளை அப்படித் தலை சாய வைத்ததேயன்றி அவள் நிலை தவறி மூர்ச்சையடைந்துவிடவில்லை. அவளுக்கு அதன்பின் நடந்தவை யாவும் கனவுபோலத் தெரிந்துகொண்டுதான் இருந்தன. ஆகவே அவள் கண் விழித்ததும், “என்னை எங்கே கொண்டுபோகிறீர்கள்? ஐயோ, பூஜையிலிருந்து என்னை என் தூக்கி வந்தீர்கள்? என்னை அங்கே கொண்டுபோய் விட்டுவிடுங்கள்” என்றாள்.

நல்ல நினைவு இருந்ததாலும், எப்படியும் ஹோமத்திற்குப் பங்கம் வராமல் நடந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தாலுமே ருக்மிணி இவ்வாறு கூறினாள். ஆனால் அதே வார்த்தை ராமலிங்கமையரின் வயிரம் பாய்ந்த மனத்தைப் பாகாக்கிவிட்டது.

ருக்மிணிக்குப் பதில் எதும் கூறாமல், அவளை வீட்டிற்குக் கொண்டுபோய்க் கட்டிலில் கிடத்திய அவர், “கோமதி, உன் பேச்சைக் கேட்காமல் மோசம் போய்விட்டேனே!” என்று கூறி, தலையில் கைகளை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்.

எற்கனவே மனம் இடிந்திருந்த கோமதிக்கு இவ்வளவு சொல்லிவிட்டால் போதாதா? பெண்ணையே பறி கொடுத்துவிட்டது போன்று, வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஓலமிட்டு அழத் தொடங்கினாள்.

ருக்குவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவள் படுக்கையினின்று எழுந்திருக்க முயன்றாள்; முடியவில்லை. தேகத்தில் அசதியும், ஜுரத்திற்குண்டான கோளாறுகளும் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. இருந்தாலும் தன் பெற்றோர்கள் இப்படித் துக்கப்படுவதன் காரணம்

என்ன? "அம்மா" என்று கோமதியம்மாளை விளித்தாள்.

"என்னடி என் கண்ணே, உனக்குச் சுயநினைவும் இருக்கிறதா?"

"அம்மா, எதற்காக அழுகிறாய்? என் என்னை இங்கே கொண்டுவந்துவிட்டீர்கள்?"

கோமதி தன் கணவனை நோக்கி, "பார்த்தீர்களா; பார்த்தீர்களா! அவள் நினைவு முழுவதும் அங்கேதான் இருக்கிறது. மந்திர சக்தி அவ்வளவு பலமாக வேலை செய்கிறது. ஐயோ, என் கண்ணை நான் உயிருடன் பார்க்கப் போகிறேனா? அட சதிகாரர்களா, என் ஒரே குழந்தையையும் பலியிட்டுவிட்டீர்களே!" என்று அழுதாள்.

ருக்மிணி எவ்வளவு ஆலோசனை செய்தும் தாயின் சொற்களை அர்த்தம் செய்து கொள்ள முடியவில்லை. "அம்மா, என்னை ஏன் இப்படிப் பைத்தியமாய் அடிக்கிறாய்? நீ சொல்வது ஒன்றும் எனக்குத் தெரியவில்லையே. யாரைச் சதிகாரர்கள் என்கிறாய்? யார் யாரைப் பலியிட்டுவிட்டார்கள்? யாருக்கு என்ன நேர்ந்துவிட்டது?" என்று கேள்விகளை அடுக்கினாள்.

கோமதி வாய் திறக்குமுன் ராமலிங்கமையர், "நீ பேசாமல் இருடி. அவள் சற்று நிம்மதியாகத் தூங்கட்டும். ருக்மிணி, நீ தூங்கம்மா, காலையில் எல்லாம் விவரமாகச் சொல்லுகிறேன்" என்று கூறிச் சம்பாஷணையை முடித்து வைத்தார்.

ருக்குவுக்கு எப்படித் தூக்கம் வரும்? உடல் வருத்தம் ஒரு புறம் இருந்தபோதிலும் மன வருத்தம் அவளைக் கண்ணயர விடவில்லை. பெற்றோருக்குத் திடீரென்று உண்டான மனவருத்தத்தின் காரணத்தை ஆலோசனை செய்தவாறே கண்களை மூடிக் கொண்டு கிடந்தாள். (தொடரும்)

---

"நம்மைக் கண்டாலும் ஆண் மக்கள் நிஷ்காரணமாய்ச் சீறி விழுகிறார்கள்; காறி உமிழ்கிறார்கள்; வைகிறார்கள்; அடிக்கிறார்கள்; நாம் நமது இஷ்டப்படி பிறருடன் பேசக்கூடாதென்று தடை செய்கிறார்கள். மிருகங்களை விற்பதுபோல், நம்மை விலைக்கு விற்கிறார்கள். தம்முடைய நூல்களிலும் சம்பாஷணைகளிலும் ஓயாமல் நம்மைத் தூற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை மிக இழிவானதென்பதிலும், கூடிய சீக்கிரத்தில் மாற்றித் தீரவேண்டியதென்பதிலும் சந்தேகம் இல்லை. —பாரதியார்.

---

# காதற் கண்ணீர்

'விஜயஸ்ரீ'

அந்தி மயங்கும் நேரம்: வானத் திரையிலே தாரகைகள் ஒவ்வொன்றாக ஜ்வலிக்க ஆரம்பித்தன. சில நக்ஷத்திர மணிகள் அண்டபகிரண்டமாகிய நீல வானிலிருந்து மெல்ல நழுவி ஆகாய வெளியில் பிரயாணம் செய்யத் தொடங்கின. பகலவன் தன் சுவர்ணமயமான கதிர்களால் செடிகொடிகளை அணி செய்து, மலைவாயில் விழும் தருணம். தன் காதலனை காலைக் கதிரவனின் கொடுமையின் முன் பயந்து ஓடிய பனி மெதுவாக உலகத்தைக் கவிய ஆரம்பித்தது. மலய மாருதத்தில் உல்லாஸமாக மிதந்துசென்ற பக்ஷி ஜாலங்கள் வஸந்த கீதத்தை இசைத்த வண்ணம் தத்தம் கூடு நோக்கி விரைந்து பறந்தன.

அதோ, அந்த மல்லிகைப் பந்தல் என்ன ஒய்யாரமாக அசைந்து ஆடுகிறது! நீல வானம் வளைந்து பூமிதேவியை முத்தமிடும் அக் காட்சியைக் கண்ட அவ்விளங் கொடியின் தெள்ளிய மனத்தில் ஒரு கிளர்ச்சி - புயலின் உதயம். மல்லிகை நல்லாளுக்குத் தன் உயிர்க்காதலனது நினைவு வந்தது. தென்றல் அவள் செவிகளிலே பிரேம சங்கீதத்தை இசைத்தது. மல்லிகையின் இருதயத்திலிருந்து அதற்கு எதிரொலி எழுந்தது. முரன்று அணவிக்கொண்டு சென்ற வண்டுகள், "உன் காதலன் சீக்கிரமே வருவான். அவனுடன் கூடி இன்புற்று இருப்பாயாக" என்று நன்மொழி கூறி, அத்தூதுக்கு ஊதியமாகத் தேன் பருகி, மயங்கிச் சென்றன. குயில்கள் தம் கூடுகளில் அமர்ந்த வண்ணம் சோகக் குரலில் உருக்கமாகப் பாடின. மலய மாருதம் மெல்ல மெல்ல அசைந்து சென்றது.

அடிவானத்தைத் தன் காதலன் வரவுக்காகப் பார்த்துக்கொண்டு இருந்த மல்லிகையின் கண்களில் ஒரு புதுக் காட்சி; மனத்தில் பொங்கும் உவகை; இருதயத்தில் தெவிட்டாத இன்பக் கனவுகள்.

ஆம். அடிவானத்துக்கு அருகில் அவளுடைய காதலன் தோன்றியிருந்தான். என்னே அவன் எழில்! பால் போன்ற வெண்மையான வண்ணத்தில் தன் காதலியைச் சந்தித்துச் சரச சல்லாபம் செய்வதை நினைப்பதால் தோன்றிய சிவப்பு.

மல்லிகைக்கோ சந்தோஷம் தாங்கவில்லை. எங்கே தன் அருமைக் காதலன்

தன்னைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்காமல் போய்விடுகிறானோ என்று எண்ணித் தன் பசுங்கரங்களை மிக்க அழகுடன் ஒய்யாரமாக அசைத்து அந்த மேகத்தை அழைத்தாள். அவனும் சந்தோஷத்தோடு நீலவானில் விரைந்து உலவி வந்தான்.

தன்னை மிக்க லாகவத்துடன் கொஞ்சி அந்த லாவண்ய புருஷன் எவ்வெவ்விதம் சரஸசல்லாபம் செய்யப் போகிறானோ என்று எண்ணி, தன்னையே மறந்து கனவுலோகத்தில் தன்னந்தனியளாய்த் திரிந்து கொண்டிருந்தாள் அந்த மல்லிகை மங்கை.

திடீரென்று காதலியின் கனவு கலைந்தது. மகா கோரமான சிரிப்புச் சத்தம் அவளுடைய மனோகரமான மனக் கோட்டைகளைத் தகர்த்தெறிந்தது.



யார் அந்தக் கரிய அரக்கன்? ஏன் தன் பிரகாசமான பற்களைக் காட்டி அண்டமே நடுங்கும்படி நகைக்கிறான்? அவனைத்தொடர்ந்து வரும் அந்தக் கருந்தடியர்கள் யார்?

வான வெளியிலே ஒரு கருமேகம் தோன்றியது. ரமணீயமாக வீசிக் கொண்டிருந்த தென்றல் சற்றுக் கடுமையாக மாறியது. உலகம் கிடுகிடுக்கும்படி அகோரமான இடி. கண்ணைப் பறிக்கும் மின்னல். பின்னும் சில நீலமுகில்கள்; பிறகும் பல நீருண்ட மேகங்கள். வான வெளி கறுத்தது. அங்குமிங்கும் மட்டும் நீலவானம் எட்டிப் பார்த்தது. தென்றலிலே கடூரம் அதிகரித்துச் சூறாவளியாக மாறியது.

வெள்ளிடை மலையென யாவும் விளங்கின மல்லிகைப் பூங் கொடிக்கு. வெகு நாட்களாக வைரம் பாராட்டிவந்த அவ்வரக்கன் தன் கொடுந் தோழர்களுடன் சரியான தருணம் பார்த்துத் தன் காதலனைச் சூழ்ந்துகொண்டதைக் கண்ட தையலின் மனம் அனலிடைப்பட்ட மெழுகெனத் தத்தளித்தது.

பெரிய ஓசையுடன் காற்று மல்லிகைப் பந்தலை அசைத்தது. காதலி ஓலமிட்டாள்; கடவுளைத் தியானித்தாள். அவளுடைய அபயக்குரல் இடியோசையிலே கலந்தது.

கோரமான இடி. பளிச்சென்ற மின்னல். பேய்க் காற்று. மையிருட்டு. காற்றிலே அங்குமிங்கும் அசைந்தாடும் மல்லிகைக் கொடி. கடலலைகள் போல் வான வெளியில் சுழலும் கருமேகத் திரள்கள். மரங்களெல்லாம் பயங்கரமாக அசைந்தாடின. மறுபடியும் இடி, மின்னல். காற்றின் முனகல். அடுத்த நிமிஷம் அடைமழை.

உதயகிரியில் ஜகஜ்ஜோதியாய் ஜனித்தான் சூரியன். பூமியில் அங்குமிங்கும் தேங்கியிருந்த மழைத்தண்ணீரில் சூரியனின் ஒளி பட்டுப் பிரதிபலித்தது.

தன் காதலனது உயிருக்காகப் பிரார்த்தித்த மல்லிகை மெல்லியலாள் மயக்கம் தெளிந்து, வான வெளியை நோக்கினாள். மப்பும் மந்தாரமுமாய் இருந்த ககனத்தைக் கண்ட அதன் இருதயம் கருகியது. சோர்ந்து தலைகுனிந்தாள் அந்தக் காதலி. அவளுடைய காதலனைக் காணவில்லை!

மெதுவாகக் காற்று வீசியது. மல்லிகைக் கொடியின் இலைகள் அசைந்தன. ஓர் இலையின் நுனியில் ஒட்டிக்கொண்டிருந்த மழைத்துளி பூமியை நோக்கிப் புறப்பட்டது. வான வில்லின் எழு வர்ணங்களும் மின்னின அத்துளியில்.

அவ்விளங்கொடியின் இருதய ஒலியின் எதிரொலிபோலும் அச்சோகக் கண்ணீர்!

# காதல் மனமும் கடல் அலையும்



வி. ஜி. ஸ்ரீநிவாஸன்

கடலுக்கும் அலைகளுக்கும் எவ்வளவு நெருங்கிய உறவும் தொடர்பும் உண்டோ அவ்வளவு மனத்திற்கும் காதலுக்கும் உண்டு. மனத்தை ஒரு பேராழிக்கு ஒப்பிடுவது சாலப் பொருந்தும். கடல் எவ்வளவு ஆழம் கொண்டதோ அவ்வளவு ஆழமுடைத்து மனமும். கடல் பரந்து கிடக்கின்ற அளவிற்கு மனமும் பரந்து கிடக்கின்றது. கடல் காண்பிக்கும் அளவுக்கு மனமும் வண்ண வேறுபாட்டையும் ஜாலத்தையும் காண்பிக்கும். இவ்வளவுதானா? கடல் தன்னுள்ளே எவ்வளவு உண்மைகளையும், ரகஸ்யங்களையும் மறைத்து வைத்திருக்கிறதோ அதைப்போலவே மனமும் தன்னகத்தே பதுக்கி வைத்துள்ளது. கடல்தானா அலைகிறது? மனமும் அலைகிறது. கடல்தான் கொந்தளிக்கிறதா? மனமும் கொந்தளிக்கும். கடற் பரப்பில் வீசும் புயல்போல் மனத்திடையே புயலும் வீசும். கடல் அலைகள் உயரும், தாழும், கிளம்பும், புரளும், விழும், வரும், போகும். மனக்கடலில் எழும் எண்ண அலைகளுக்கும் இவ்வளவு குணங்களும் உண்டு. மனம் அலை கொந்தளிக்கும் 'அட்லாண்டிக்' கடல்போல் இருக்கும் சமயமும் உண்டு; 'பேரமைதிப் பெருங்கடல்' போன்று அமைதிகொள்ளும் நேரமும் உண்டு.



கடல் குதிகொள்வது எப்போது? தன் அலைக் கைகளை உயரத் தூக்கி அரற்றுவது எப்போது? மதியின் குளிர் முகத்தைக் காணும்பொழுதல்லவா? அதனைப்போலவே காதல் மனமும், காதலி அல்லது காதலனின் ஆசை முகத்தை - நினைவுமுகச் சந்திரனைக் கண்ணுறும்போது, அதன் நினைவால் வாடும்போது அலை வீசுகிறது, கொந்தளிக்கிறது, குமுறுகிறது, அமைதியற்றிருக்கிறது. சிந்தனை கிளம்பும்; அகப்போர் நிகழும்; தூக்கம் பிடிக்காது. மதுவைப் பொழியும் சந்திரனும் எரிக்கும்; பால் சுவைக்காது; கோலக்கிளிமொழியும் காதில் குத்தல் எடுக்கும். அந்த நினைவுமுக மண்டலத்திற்கு அவ்வளவு வன்மை!

காதல் கொண்ட மனமும் மிகவும் துணிச்சலுடையதாகத்தான் இருக்க வேண்டும். இந்தக் காதலனுக்குத்தான் என்ன துணிச்சல்! "நெரித்த திரைக் கடலில் நின் முகம் கண்டேன்", "திரித்த நுரையினிடை நின் முகம் கண்டேன்" என்கிறான் காதலன். இதோடு நிறுத்தி விடுகிறானா? காதலியின் மனத்திற்குள்ளும் புகுந்து பார்த்துவிடுகிறான்! அதே உணர்ச்சியோடு, "நீலக்கடல் அலையே உனது நெஞ்சில் அலைகளடீ!" என்று கூறுகிறான். எவ்வளவு துணிவு! "கடலினும் பெரிதெமக் கவரிடை நட்பே!" என்பாள் காதலியொருத்தி!

"காதலென் றிதுவுமோர் கள்ளின் மயக்கமோ?"

* * *

காதலி 'உண் கண்'களை உடையவள்! 'மையுண்ட கண்'கள் என்று கூறுதல் மரபு. ஆனால் காதலனையே உண்டுவிடுவதுபோல் பார்க்கும் கண்களைக் கொண்டவள் என்று கூறுதல் பொருந்தும். அழகு பொங்கி வழியும் - அம் கவிழ் மேனி படைத்தவள். 'பருவ காலத் தருணி' அல்லவா? வயசு அவள் மேனிமீது ஸௌந்தர்யத்தை வாரி இறைத்திருக்கிறது. இளமைக்

காலத்திற்கோர் கோலம் செய்து கணத்திற்கோர் எழில் காட்டுகிறது. இப்படிப்பட்ட நலங்கொள் நாரியைச் சந்தித்திருந்தான் தொண்டித் துறையிலே ஒரு தலைவன். பாவம்! இப்போது பிரிந்திருக்கிறான். பிரிவாற்றாமை புண் செய்தது; காதல் நோய் செய்தது. மதுவைப் பொழிந்து மயக்கங் கொடுத்த மதிநிகர் வதனம் தோன்றி வாட்டுகிறது. பொழுது போகவில்லை. உறக்கமும் ஒழித்தான்! அருகிலிருந்த அவனுடைய 'பாங்கன்' —நண்பன் இவனைப் பார்த்து, "கண் துயில்கின்றிலை, காரணம் என்ன?" என்று கேட்டுவிடுகிறான். அவனுக்கு விடை பகர்கிறான் காதலன்:

"ஒண்தொடி அரிவை
கொண்டனள் நெஞ்சே
வண்டிமிர் பனித்துறைத்
தொண்டி ஆங்கண்
உரவுக் கடலொலித்
திரையென
இரவி னாலும் துயிலறி
யேனே."

—ஐங்குறுநூறு.

[ஒண்தொடி - ஒளி பொருந்திய வளையல். வண்டு இமிர் - வண்டுகள் ஒலிக்கின்ற. உரவு - உலவுதலையுடைய.]

"நண்பா, ஒளி பொருந்திய வளைக் கரங்களைக் கொண்ட ஏந்திழை ஒருத்தி என் மனத்தைக் கொள்ளை கொண்டுவிட்டாள். அவள் மிகவும் அழகு படைத்தவள். 'பொங்கரி படர்ந்த வுண்கண், அங்கலிழ் மேனி' கொண்டவள்! எப்போதும் அவள் நினைவாகத்தான் இருக்கிறேன். காதலுக்குத் தான் கண் என்பது கிடையாதே! அப்புறமல்லவா தூக்கம் என்பதும்? அது சரி. உனக்குத் தொண்டித் துறை நன்கு தெரியுமே! அந்தத் துறை வண்டார்க்கும் ஒலி கொண்டது; குளிர்ச்சி தர வல்லது என்று சொல்ல வரவில்லை. நீ கடலை நன்றாகக் கவனித்திருக்கிறாயா? கடல் எப்போதும் அமைதியிழந்திருக்கிறதல்லவா? எப்போதும் அலைந்து கொண்டே இருக்கிறது. பாவம்! ஓய்வு ஒழிச்சல் என்பதே கிடையாது! பகலில்தான் இப்படியென்றால் இரவிலும் அப்படித்தான். இரவிலும் அலை மோதுகிறது, கொந்தளிக்கிறது, குமுறுகிறது, பொருமுகிறது. ஏதோ வேதனை போலும்! அந்தக் கடலுக்கும் என் மனத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை இருக்கிறதென்றே சொல்லவேண்டும். இப்போது புரிகிறதா, நான் கண் துயிலாத காரணம்?" என்கிறான் தலைவன்.

* * *

காதலன், 'ஒரு காலமும் சிதையாமை நல்கும் கல்விப் பெருஞ் செல்வம்' பெறும்பொருட்டோ, அல்லது பொருள் ஈட்டும் பொருட்டோ காதலியைப் பிரிந்துபோயிருக்கிறான். காதலி காதலனை நினைந்து நைந்து உருகுகின்றாள். அவன் நினைவு தவிர வேறு நினைவில்லை. உண்ணும் சோறு, பருகும் நீர் எல்லாம் அவன் நினைவிலே. படுக்கை கொள்ளவில்லை; பாலும் கசந்தது. கவலையற்று உறங்கும் ஊராரை வைகின்றாள். 'ஐயோ, இப்படிக் கவலையற்று, மெய்ம்மறந்து உறங்குகின்றீர்களே! சீ! இது என்ன உலகம்? இப்படி ஒருத்தி வேதனைப்படுகிறாளே என்று யாருக்காவது தெரிகிறதா? என்ன இருதயமற்ற உலகம்!' என எண்ணமிடுகிறாள். 'சரி, நமக்கோ தூக்கம் பிடிக்கவில்லை. கடற்கரைக்குச் சென்று உலவி வருவோமே' என நினைந்து கடற்கரை சேர்கிறாள். வீடு கடற்கரை அருகே தான் இருக்கிறது. இள நிலவு காய்கிறது. உலவியதில் பயனில்லை. கடற்கரையில் வளர்ந்திருந்த புன்னை மரத்தடியே உட்கார்ந்தாள். எதிரே அலை வீசும் கடல், பொருமுகின்ற கடல், அமைதியற்ற கடல். இளங்காற்று, புன்னை மலரின் மணத்தையும் கலந்து வீசுகிறது. இவையெல்லாம் இவளது பிரிவாற்றாமை நிலையைப் பெரிதுபடுத்துகின்றன. தன் மன நிலையும் எதிரே காணும் கடல் நிலையும் எவ்வளவு தூரம் ஒத்து வந்திருக்கின்றன என்று கண்டுகொள்கிறாள்; தன்னைப்போலவே கடலும் துன்பத்திற்குள்ளாகியிருக்க



வேண்டுமென்று அனுமானிக்கிறாள். இள நிலவில் கடல் கறுத்துக் காண்கிறது, கடலின் மேனியும் கறுத்து விட்டது. காதல் நோயால் வாட்டமுற்ற தனது மேனி கறுத்திருப்பது என்னவோ, உண்மைதான். இந்தக் கடலுக்கு என்ன நேர்ந்துவிட்டது? இதுவும் இரவு முழுவதும் உறங்காமல் இருப்பானேன்? இவ்வாறாக யோசித்துக் கடலைத் தன் 'சகி'யாகக் காண்கிறாள். அவள் வாயிலாக ஒரு பாட்டு வருகிறது.

"உன்னையும் நீத்தகன்றார்
உண்டோ? உடல்கருகிப்
புன்னை கமழும் பொருகடலே—
என்னைப் போல்
நெஞ்சா குலம்பெருகி
நீயும் இரவெல்லாம்
துஞ்சாத தென்கொலோ?
சொல்லு."

—கிளவித்தெளிவு.

"உடல் கருகி, அலை மோதிப் பொருமுகின்ற கடலே! என்னைப்போல நீயும் மன வேதனை கொண்டு இராமுழுதும் உறக்கமின்றி இருப்பது ஏன்? உன்னையும் அகன்று சென்றவர் உண்டோ, என் காதலன் செய்ததுபோல? அப்படிப் பிரிந்தவரை நினைந்துதான் நீயும் என்னைப்போல உடல் கருகி, மனம் நொந்து, பொருமுகின்றாய்போலும்!" எனக் கடலைத் தன் சமதுக்கியாக வைத்துப் பேசுகின்றாள்.

* * *

நளன் தன் காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்டவன்! கலியின் கொடுமையால் 'ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக' அவள் ஆடையில் பங்கீடு செய்துகொண்டு தமயந்தியின் 'இன்னுயிரும், தன்னருளும், பூந்துகிலும் வேறாகப்'போயினன்! எங்கெல்லாமோ சுற்றி அலைகிறான். அங்கே சுற்றி இங்கே சுற்றிக் கடற்கரைக்கு வந்து சேர்கிறான். தமயந்தி பற்றிய 'நினைப்பெனும் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளும் கனல் புகைய வேகின்றான்' நளன். பிரிவாற்றாமை தாங்க இயலாததாக இருக்கின்றது. தன் நோயைப் பனிக்குருகினிடத்தும், கொக்கினிடத்தும் மொழிகின்றான். கடலோரமாய் நடந்து வருகின்றான். அங்கே காணும் ஒவ்வொரு காட்சியும் இவன் நோயை மிகைப்படுத்துகின்றது. இவன் காலடிச் சத்தம் கேட்டு ஓடி ஒளியும் நண்டின் செயல் கண்டு மனம் மாழ்குகின்றான். இந்நிலையில் எதிரே தோன்றும் கடலையும் கண்டுவிடுகின்றான்.

கடல் பேரலைகளை எழுப்புகின்றது. சிற்றலைகளை எழுப்புகின்றது. அலைகள் நுரை ததும்பப் பொங்கிப் பேரிரைச்சலுடன் கரையை நோக்கி வருகின்றன. கரையில் மோதியவுடன் சிதறுண்டு போகின்றன. பின்வாங்கித் தம்மை உள் இழுத்துக்கொள்கின்றன. பாய் சுருட்டிக்கொள்வதுபோலச் சுருட்டிக்கொள்கின்றன. மறுபடியும் ஒரு பேரலை; மேடு, பள்ளம், திரை, நுரை - இதே காட்சிதான். போகிறது, வருகிறது. புரள்கிறது, விழுகிறது, இறங்குகிறது. விம்முகிறது, பொருமுகிறது. இவ்வளவுக்கும் என்ன காரணம்? கேள்விமேல் கேள்வி தோன்றுகிறது, நளன் மனத்திடையே. தன் சஞ்சல மனத்துக்கும் கடலுக்கும் நெருங்கிய ஒற்றுமை இருப்பதைக் காண்கிறான். தன்னையே தேற்றிக்கொண்டு விடை தெரிந்து கொள்கிறான். கடலைப் பார்த்து நளன் மொழிகின்றான்:

"போவாய், வருவாய்,
புரண்டு, விழுந்திரங்கி
நாவாய் குழற
நடுக்குறுவாய் - தீவாய்
அரவகற்றும் என்போல
ஆர்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொல்
இன்று!"

("தீவாய் அரவகற்றும் என்போல" - இதிலே நளன் தான் முன்பு கார்க்கோடகனைத் தீயினின்று மீட்டதைக் குறிக்கிறான்.)

"போகின்றாய், வருகின்றாய், புரளுகின்றாய், விழுகின்றாய், இரங்குகின்றாய். ஏன் இந்தச் சஞ்சலம்? நாவும் வாயும் குழறுகின்றன. ஏன் இப்படி உளறிக் குளறுபடி செய்கின்றாய்? ஏன் நடுக்கங்கொள்கிறாய்? ஒலிக்கும் கடலே! நீ ஓலமிட்டு அவலமெய்தக் காரணம் என்ன? நீயும் என்னைப் போலவே பெண் ஒருத்தியை இரவிலே பிரிந்துவிட்டாயா என்ன?" என்று கடலை விளித்துக் கேட்கிறான் நளன்.

* * *

காதல் நோய் கொண்ட மனம், சமாதானம் தேடித் தன்னைத் தேற்றிக் கொள்ள முயல்வது இயற்கைதானே! "புண்பட்டவரே புண்வலியறிவர்."

# அபராஜிதா

எப். டபிள்யூ. பெயின்
மொழிபெயர்ப்பு: கி. சாவித்திரியம்மாள்

(சென்ற இதழ் 52-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 7

அம்மொழிகளைக் கேட்டபோது, காமரூபனின் தலை சுற்றிற்று. கனவு கண்டு விழித்தவன்போல் அபராஜிதாவை நோக்கியபடியே அசைவற்று உட்கார்ந்துவிட்டான். இரண்டொரு தடவை பேச முயன்றும் அவனுக்குப் பேச்சு எழும்பவே இல்லை. அவள் சொற்களினின்றும் எழுந்த விவரிக்க முடியாத ஓர் இன்ப வெறி அவன் உள்ளத்தில் குடிகொண்டது. மெய்ம்மறந்த நிலையினால் அவன் கண்கள் ஒன்றையும் பார்க்க இயலாமற் போயின. அபராஜிதாவின் குரல் மட்டும் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது. கடைசியாக அவன் கனவினின்றும் விழித்தெழுந்தவன்போல் சுயநிலையை அடைந்து எதிரே நோக்கினான். ஆஹா! அபராஜிதா உண்மையில் அவன்முன் நின்றுகொண்டுதான் இருந்தாள். அவள் அவனை நோக்கிக் கொண்டிருந்த விதமானது அவனை மயிர்க்கூச்செறியும்படிச் செய்தது. அவள் இதழ்களில் அரும்பிய புன்னகையோ அவன் உள்ளத்தையே கொள்ளை கொண்டது. ஒன்றும் பேச இயலாமல் கைகள் இரண்டையும் கூப்பிக்கொண்டு மௌனமாய் அவளை நோக்கிக்கொண்டு நின்றான். அப்பார்வை, "என்பால் அருள் புரிந்து நீ கூறியபடி செய். இல்லாவிடில் இப்படியே என்னைக் கொன்றுவிட்டாலும் நல்லது" என்று கூறுவதுபோல் இருந்தது.

சற்றுப் பொறுத்து அபராஜிதா, "காமரூபரே! நான் சொல்வதைக் கேளும்" என்று தொடங்கினாள். "அதோ ஜலத்தில் அம்மீன் எப்படித் துள்ளி விழுகின்றது பாரும். அதுபோல் அநாயாசமாய்க் கூடு விட்டுக் கூடு பாய்வது எப்படி என்பதை நான் உமக்குக் கற்றுக் கொடுக்கிறேன். ஆனால் காரியம் நடப்பது உம்மைப் பொறுத்தது. நீரே தைரியமாய் உம் சொந்த லாபத்திற்காக அதை இப்பொழுதே செய்து முடிக்க வேண்டும். ஆயினும் அரசனுடைய உருவத்தைப் போல் நீரும் அடைய வேண்டும் என்றே விரும்புவதால் பாதிக் கஷ்டம் நீங்கி விட்டதென்று சொல்லலாம். ஆனால் அவர் உயிரோடு இருக்குமளவும் நீர் அவர் உடலை உம்முடையதாக்கிக் கொள்வது முடியாது. உம்மிடம் அவருக்கு நம்பிக்கையை உண்டாக்கி ஒரு நிமிஷமேனும் அவர் தம் உடலை விட்டுப் பிரிந்திருக்கும்படி செய்ய முடியுமானால் நீர் உடனே அச்சமயத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். உங்கள் சொந்த உடலை விட்டு மற்றோர் உடலில் பிரவேசிக்கும் வித்தையை நான் உமக்குக் கற்றுக் கொடுக்கிறேன். அம்மந்திரத்தைச் சரியாய்த் தெரிந்துகொண்ட பிறகு நீர் அரசனை நெருங்கிப் பழகி அவருக்கு இவ்விஷயத்தில் குதூகலம் உண்டாகும்படிச் செய்ய வேண்டும். இது ஒன்றும் அப்படிச் சிரமமான வேலையல்ல; ஏனெனில் ஒரு வேலையும் இல்லாதவர்களாக இருப்பதால், அரசர்களுக்கு ஏதாவது புதிய விநோதம் என்று கூறி விட்டால் போதும்; அதிக உத்ஸாகமுண்டாய் விடும். அதை ஏற்படுத்தும் மனிதனையும் வெகுவாய்ப் பாராட்டுவார்கள். தெய்வம் இம்மாதிரி நடப்பதற்காகவே உம்மைச் சிருஷ்டித்திருப்பதுபோல் தோன்றுகிறது. உமது குரூபமே உமக்குப் பெரிய சக்தியாக அமையும். உண்மையில் அது உமது வஞ்சகத்தைப் பிறர் அறியவொட்டாமலும் செய்துவிடும். அவருக்கு விநோதம் உண்டாக்கிச் சிரிக்கும்படிச் செய்து வெகு சுலபமாய் நீர் அவருக்கு வேண்டியவராகிவிடலாம். அப்படியே கூடு விட்டுக் கூடு பாயும் வித்தையை அறிந்து கொள்ளும் ஆசையில் அவரை மெதுவாய்த் தம் தேகத்தைத் துறக்கும்படி செய்துவிடும். கணப்பொழுதேனும் உம்மால் இதைச் செய்ய முடிந்தால் பிறகு உம் காரியம் நிச்சயம் வெற்றிதான். நீர் வெற்றி அடைந்தவுடன் என்னை வந்து பாரும். அதற்குமேல் என்ன நடக்குமோ, நான் இப்பொழுது சொல்ல முடியாது."

பாதி மூடிய கண்களுடன் அவனை நோக்கியபடியே அவள் தன் மனத்துக்குள் பின் வருமாறு எண்ணமிடலானாள்: 'இச்

சனியன் பிடித்த நாவிதனுக்கு அம்மந்திரத்தை உபதேசிக்குமுன் இவன் ஆத்மா எப்படிப்பட்டது; இவன் உடலைப்போன்றதா; அல்லது அரசன் உடலைத் துறக்கச்செய்யும் குற்றத்தைச் செய்யத் தயங்குகிறதா என்று பார்க்க வேண்டும். நான் கூறியபடி செய்ய இவன் மனம் ஒப்பவில்லை என்றால், பாவம்! போனாற் போகிறது என்று இவனை விட்டு விடலாம் என்றே தோன்றுகிறது. ஆயினும் இவனுக்குத் தன்னைப்பற்றிய நினைவில் வேறு ஒன்றும் மனத்திற் படாதென்றே நினைக்கிறேன். ஆம், என்னைப் பார்க்கும்போது இவனுக்கு எல்லாம் மறந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.'





அவள் எண்ணியபடியே தான் காமரூபனின் மனநிலையும் காணப்பட்டது. தன் உடலை விட்டு அரசனது உடலில் எப்பொழுது பிரவேசிப்போம் என்றே அவன் துடித்துக்கொண்டிருந்தான். அதை விட்டு அவனுக்கு வேறு நினைவே இல்லை. அரசனது உருவம் தனக்குக் கிட்டிவிட்டால் அபராஜிதாவும் தன்னைக் கண்டு ஆசை கொள்வாள் என்ற எண்ணமானது அவனை ஒரே இன்பக் கடலில் ஆழ்த்தியது. அந்தக் களிப்பில் முழுகி மெய்ம்மறந்தவனாய் அந்நிமிஷமே அவன் தன் உடலைத் துறக்கத் தயாராக இருந்தான். "கூடு விட்டுக் கூடுபாயும் அம்மந்திரத்தை மட்டும் எனக்கு உபதேசம் செய். மற்ற விஷயத்தைப்பற்றி நான் பார்த்துக் கொள்ளுகிறேன். இனி ஒரு க்ஷணமும் என்னால் காத்திருக்க முடியாதென்று தோன்றுகிறது. ஜன்மம் முழுவதும் ஓர் இருண்ட அறையில் வாசம் செய்தவனுக்குப் பொழுது விடிந்தவுடன் விடுதலை என்றால் எப்படி இருக்குமோ அப்படியே தோன்றுகிறது" என்றான் தாழ்ந்த குரலில்.

"நான் கூறுவதைக் கவனமாய்க் கேட்டு மனத்தில் அப்படியே பதிய வைத்துக் கொள்ளும். ஏதேனும் ஓர் அக்ஷரம் மறந்து போனாலும் பிறகு உம் காரியம் அரைகுறையாய்ப் போய்விடும்" என்று கூறிவிட்டு, அபராஜிதா தன் கைச் சுட்டு விரலை உயர்த்தி, "இதுதான் அம்மந்திரம். உயிரில்லாத உடல் எதுவாயினும் அதன்மீது நன்றாய்த் திருஷ்டியைச் செலுத்தி, 'யதோபதேசம் பூதாவேசம்' என்று இவ்வார்த்தைகளைத் தவறில்லாமல் ஜபிக்க வேண்டும். உடனே உம் உடலை விட்டு நீர் அவ்வுடலில் பிரவேசித்துவிடுவீர். மறுபடியும் உம் உடலில் புகவேண்டும் என்றால், 'கதாஸோரஸ்ய ஸ்மராமிருதாஸ்ய' என்ற வார்த்தைகளைக் கூறியவுடன் பழைய உடலை அடைந்துவிடுவீர். மந்திரத்தை மட்டும் சரியாய்க் கற்றுக் கொண்டு தவறில்லாமல் சொல்லிப் பார்க்க வேண்டும். ஒரு சிறிய தவறு ஏற்பட்டாலும் குடிகெட்டுப் போய்விடும்" என்றாள்.

அவள் கூறி முடிப்பதற்குள் காமரூபன் அம்புபோல் அவ்விடம் விட்டுப் பறந்து சென்றான். அப்படிப் போகும் அவனை வெறுப்பும் இகழ்ச்சியும் கலந்த பார்வையுடன் அபராஜிதா நோக்கிக்கொண்டிருந்தாள்.

'ஐயோ பாவம்! அவனுக்கு நாம் என்ன செய்கிறோம் என்பது தெரியவில்லை. தெரிந்தால் தனக்கு நாசத்தை உண்டாக்கிக் கொள்வதற்கு இப்படி விரைந்து செல்லமாட்டான். அவன் வெற்றியெல்லாம் ஒரு நொடியில் தீர்ந்து போய் ஒரே தாபத்திற்கு இடமாகிவிடாதா? நெருப்புடன் விளையாடுபவர்கள், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் எல்லோரையும் ஒரே விதமாய் அது எரித்துவிடும் என்பதை மறந்துவிடுவார்கள் என்று என் தந்தை கூறியது எவ்வளவு சரியாக இருக்கிறது! அவ்வுண்மையைக் காமரூபன் சீக்-

கிரத்திலேயே அறிந்துகொள்வான். கூடு விட்டுக் கூடு பாய்வது என்பது ஒன்று; தனக்குப் பிடித்த உடலோடு இருப்பது மற்றொன்று. அவன் என்னை இன்னும் நன்றாய் அறிந்துகொள்ளும்பொழுது மாமலரினின்றும் தேனைச் சுமந்து வரும் வண்டுதான் எனினும், நெருங்கினால் கொட்டிவிடும் என்று தெரிந்துகொள்வான்' என்று அவள் எண்ணினாள்.

சிவபெருமான் இவ்வாறு கூறிக்கொண்டே வருகையில் அம்பிகை திடீரென்று அவரைத் தடுத்து, "இந்த அபராஜிதா ஈவு இரக்கமில்லாத ஒரு சிறுக்கி என்று நினைக்கிறேன். அவள் மனம் கல்லினும் கடினமாக இருக்க வேண்டும். இப்படித் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காகப் பாவம், காமரூபனை ஒரு கருவியாக உபயோகித்துக் கொண்டிருக்கிறாளே! அதற்காக அவனைப் படுகுழியில் தள்ளவும் அவள் யோசிக்கவில்லை. உண்மையில் அவ்வளவு பொல்லாதவள் என்றால் அவள் நீண்ட கூந்தலையே கயிறாகத் திரித்துக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொன்றாலும் தகும் என்றே தோன்றுகிறது" என்றாள்.

அதைக் கேட்டு மகேசுவரர் உரக்கச் சிரித்தார். "ஆஹா ஹைமவதீ! உன் இனத்தாரின் இயல்பைப்பற்றியே நீ இவ்வளவு வியப்படைகிறாயே! அவ்வளவு ஒன்றும் தெரியாதவளா நீ? அபராஜிதா தன் ஜாதிக்கு ஏற்றபடிதான் நடந்திருக்கிறாள். பெண்களின் குணத்திற்கு ஏதேனும் ஒரு வியவஸ்தை உண்டோ? தன் ஆசைக் காதலனிடம் வெண்ணெயைக் காட்டிலும் வேகமாய் உருகும் உள்ளத்தையுடைய ஒரு பெண் தான் விரும்பாதவர்களிடம் கருங்கல்லினும் கடின சித்தமுடையவளாய் விடுகிறாள். அலைகள் எவ்வளவு மோதினாலும் கற்பாறை அசைந்து கொடுக்குமோ? அதுபோல அப்பெண்ணின் உள்ளமும் தனக்கு விருப்பமில்லாதவர்கள் விஷயத்தில் சற்றேனும் இளகுவதில்லை. மேலும் தன் ஆசைக்குரியவனை அடைவதற்கு அவள் எதுவும் செய்யப் பின் வாங்கமாட்டாள். தன் கண்களில் மொய்த்துக்கொண்டிருக்கும் ஈக்களை வெகு அலக்ஷ்யமாய்ப் பசு காதுகளை ஆட்டி விரட்டுவதுபோல், எவ்விதத் தொந்தரவையும் உடனே அகற்றிவிடுவதற்கு அவள் அஞ்சுவதில்லை. ஆயினும் பாவம்! காமரூபனுக்காக இரங்க வேண்டியதுதான் என்றாலும் அதனால் என்ன பயன்? முற்பிறப்புகளில் செய்த பாவங்களுக்கு அபராஜிதாவின் மூலமாய்த் தண்டனையை அநுபவிக்கும்படி அவன் விதிக்கப்பட்டவன். யாவும் நான் கூறியபடியே நடந்திருக்கும் பொழுது நீ இவ்வற்ப விஷயத்திற்காகக் கதையை நடுவில் நிறுத்திவிட்டாயே! அபராஜிதா செய்தது தவறோ அல்லது சரியோ! உன் திருப்திக்காக வரைந்த சித்திரம்போல் இனி அவளை மாற்ற முடியுமா? கதை கேட்பவர்களின் கடமை, பேசாமல் கேட்டுக்கொண்டிருப்பதுதான் அல்லவா? மற்றொரு பெண் தன்னைக் கண்டு மெச்ச வேண்டும் என்று ஒரு பெண் நடப்பதாயிருந்தால் அவளால் ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில் உலகில் ஒவ்வோர் அழகிய மங்கையும் மற்றோர் அழகிய மங்கையின் விரோதியேயாவாள். தன்னைப்போல நடப்பதற்காகவே அவளைப் பெரும் போட்டியாக நினைத்து அவள்மீது கடும் பழி சுமத்துவாள். மற்றொரு மாதைப் பற்றி நன்றாய் அறிந்திருந்தாலும் தன்னைப்பற்றி அவள் தெரிந்து கொள்வதில்லை. பிறர் தன்னைப் பார்ப்பதுபோல் பார்க்கும் சக்தி இல்லாததால் தனக்கும் மற்றவர்களுக்குமுள்ள ஒற்றுமையை அவள் அறியமாட்டாள். ஏன், இவ்வுலகம் தோன்றின நாள் முதல் எல்லாப் பெண்களையும்போன்றவளே நானும் என்பதை எந்தச் சௌந்தரியமுள்ள பெண்தான் அறிந்துகொண்டிருக்கிறாள்? இப்படித்தான், மற்றப் பூனைகளும் சப்தம் செய்யாமல் பாயும் என்று பூனைக்குத் தெரியவே தெரியாதாம். அதுபோல இருக்கிறது நீ கூறுவது."

"சரி, போகட்டும். உங்கள் கதையைக் கூறி முடியுங்கள்" என்றாள் தேவி.

பிறை சூடும் பெருமான் மீண்டும் சிரித்தார். "என்ன அநியாயம்? நீயே தடுத்துவிட்டு என்னைக் கோபித்துக்கொள்ளுகிறாயே! காமரூபன்மீது பிறந்த தயை உன் பொறுமையை மிஞ்சிவிட்டதோ? அபராஜிதாவைக் கண்டிக்க வேண்டும் என்ற ஆத்திரத்தில் கதையைக் கடைசி வரையில் கேட்பதற்குக்கூட உன்னால் முடியவில்லை. போனால் போகிறது; கதை சீக்கிரத்தில் முடிந்துவிடும்" என்றார்.

## 8

இதன் நடுவில் கேசவன் எப்படியோ நடந்து அரண்மனை போய்ச் சேர்ந்தான். அவனை ஏதோ கொடிய மிருகம் தூக்கிச் சென்று கொன்று தின்றுவிட்டது என்று எண்ணிய அனைவரும் அவன் சௌக்கியமாய் வந்து சேர்ந்ததைக் கண்டு ஆனந்த

முற்றனர். காமரூபனைப்போலவே அவனும் தன் உள்ளத்தை அபாராஜிதாவிடமே விட்டு வந்திருப்பதை உணர்ந்தான். அதற்குப் பதில் அவளுடைய நீலோற்பல மலர் அவனிடம் இருந்தது. அவனையும் மீறி அவன் கை அம்மலரை விடாமல் கெட்டியாய்ப் பற்றிக்கொண்டிருந்தது. அது அவன் முன் நின்று, "எங்கே, மலருக்கு உடையவளை உம்மால் மறக்க முடியுமோ பார்ப்போம்" என்று கூறி அவன் உறுதியைப் பரிகசிப்பது போல் இருந்தது. கேசவன் என்ன செய்வான்? அபாராஜிதாவை அவனால் மறக்கமுடியவில்லை. அப்பொழுதுகூட அவனுக்கு அவள் நினைவாகவே இருந்தது. இரவு முழுவதும் அவளைப்பற்றிக் கனவு கண்டுவிட்டுப் பொழுது விடிந்ததும் ஒன்றும் செய்யத் தோன்றாமல் அப்படியே அசைவற்று உட்கார்ந்திருந்தான். அவனால் ஆகாரமும் உட்கொள்ள முடியவில்லை. அபாராஜிதாவின் ஸ்பரிசம் பெற்றவுடனேயே தன் தீர்மானம் அகங்காரம் யாவும் ஒரு நொடியில் இருந்த இடம் தெரியாமற் போனதைக் காண அவன் மிகவும் வெட்கமடைந்தான். உண்மையை ஒப்புக்கொள்ள அவனுக்கே மிக்க அவமானமாக இருந்தது. ஒவ்வொரு சமயம் அவளை அப்படியே கொன்றுவிட வேண்டுமென்ற ஆத்திரம் அவனுக்கு உண்டாயிற்று. ஆயினும் அபாராஜிதா காந்தம்போல் அவனைத் தன்வசம் இழுக்கலானாள். அவள் வசமாவதனின்றும் மானம் அவமானம் இரண்டும் சேர்ந்து அவனைத் தடுத்தபோதிலும் எங்கே தன் உறுதி தளர்ந்துபோய் அவள் அடிபணியும் தாசனாவதை அவன் விரும்பிவிடுவானோ என்று ஒவ்வொரு நிமிஷமும் சந்தேகம் உதித்தது. அந்த நீலோற்பல மலரும் அவன் கண்முன் சதா காட்சி அளித்துக்கொண்டே இருந்தது. அதைப் பார்க்கும் பொழுதெல்லாம் நடந்தவை யாவும் மலரின் உருவத்தில் தோன்றிச் சிறிது வெறுப்புடன், "இதோ பார். உன்னைப் போலவே நானும் மெதுவாய் வாடியுலர்ந்து கொண்டிருக்கிறேன். எல்லாம் நம் இருவருக்கும் ஜீவாதாரமாக இருந்த அக்குளக்கரையை விட்டு என்னைக் கொண்டுவந்ததுதான் காரணம்" என்று அவனை நோக்கிக் கூறுவதுபோல் இருந்தது.

அரசனின் நிலைமையைக் கண்டு மந்திரி முதலானோர் அச்சமுற்றார்கள்.

"அரசர் இப்படி உத்ஸாகம் இழந்து விளங்குவதற்கு என்ன காரணமோ தெரியவில்லையே! காட்டில் ஏதாவது விஷப்பாம்பு கடித்திருக்குமோ? அவரைப் பார்த்தால் உயிர் இருந்தும் உயிர் இல்லாதவர்போல் அல்லவோ தோன்றுகிறார்?" என்று அவர்கள் கவலைப்பட்டனர்.

"அரசர் உடம்பைப்பற்றி நாங்கள்தாம் அறிவோமேயொழிய மந்திரிகளுக்கு என்ன தெரியும்? எல்லாம் அவர் தந்தை செய்த வேலை. அவர் உத்ஸாகமற்று இருப்பதில் என்ன ஆச்சரியம்? மன்மதனே பெண்ணின் காற்றுப்படாமலிருப்பதை யாரேனும் கண்டதுண்டோ?" என்று அரண்மனை வைத்தியர்கள் கூறினார்கள்.

அப்படியே அவர்கள் தம்மைத் தன் வந்தரிகளாகவே நினைத்துக்கொண்டு நகரம் முழுவதும் தேடி மிகவும் ரூபவதியான ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து அரசனின் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். ஆனால் அவர்கள் எண்ணியதற்கு நேர் விரோதமாயிற்று. கேசவன் ஒரே கோபத்துடன் அவர்கள் மேல் சீறி விழவும் அவர்கள் நடுநடுங்கிப் போய் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்கள். பாவம்! அந்தப் பெண்ணோ பயத்தில் அப்படியே மூர்ச்சித்து விழுந்துவிட்டாள். அவளை எடுத்துப் போய்ச் சிகிச்சை செய்ய வேண்டியது அவர்கள் வேலையாயிற்று. 'ஆஹா! எல்லோரையும்விடப் பெரிய அறிஞர்கள் என்று இவ்வைத்தியர்கள் இறுமாப்புக் கொண்டிருந்தார்கள் அல்லவா? இவர்களுக்கு நன்றாய் வேண்டும். பெண் வாடையே வீசப் பொறுக்காத அரசனிடம் ஒரு பெண்ணைக் கொண்டுவந்து ஆசை காட்டினார்களே?' என்று மந்திரிகள் எண்ணியவர்களாய், ஜோசியர்களிடம் கலந்து ஆலோசித்து வேறு எவ்வளவோ விதமாய் அரசனை விநோதப்படுத்த முயன்றார்கள். மன்னனோ எதிரில் நாட்டியமாடும் பெண்களையாவது பாடகர்களையாவது சிறிதேனும் கண்ணெடுத்தும் பாராமல் ஒரே துயரக் கடலில் ஆழ்ந்தவன்போல் உட்கார்ந்திருந்தான். ஒன்றும் பலிக்காமற் போகவே சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் அம்முயற்சிகளையும் விட்டுவிட்டார்கள். ஆயினும் நகரெங்கும், "அரசனின் வியாதியைக் குணமாக்குபவர்களுக்கு அரசனுடைய நிறைக்குச் சமானமான தங்கம் அளிக்கப்படும்" என்று பறை சாற்றுவித்தார்கள். இச்செய்தி எங்கும் காட்டுத் தீப்போல் பரவியது. பணம் கிடைக்கும் என்ற ஆசையில் ஜனங்களும் கூட்டம் கூட்டமாய் வந்து கூடினார்கள். அதனுடன் மன்னனுக்கு ஏதோ நோய் என்றதும்

அவர்கள் மிகவும் வருத்தமும் அடைந்தார்கள். ஏனெனில் அரசனை ஸாக்ஷாத் மன்மதன் என்றே எண்ணி அவர்கள் அவனைப் பார்க்கும்பொழுதெல்லாம் தங்கள் பிறவிப் பயனைப் பெற்றுவிட்டதாகக் களிப்படைவார்கள்.

இச்செய்தியைக் கேட்ட காமரூபனும் எல்லையில்லாத ஆனந்தமடைந்தான். “அடாடா! எதற்காக மூளை கலங்க யோசித்துப் பிராணனை விட்டுத் தவித்துக் கொண்டிருந்தேனோ அந்தச் சந்தர்ப்பம் இப்பொழுது தானாகவே வாய்த்திருக்கிறதே! என் பிரார்த்தனைகளுக்கு மனமிரங்கி அந்த விநாயகக் கடவுளே இந்த அருள் புரிந்திருக்கிறார் என்பதில் ஐயமில்லை” என்று தானே கூறிக்கொண்டான். தனக்கு அவ்வாறு அருள் புரிந்தது விநாயகக் கடவுள் அல்ல, அபராஜிதாவே என்று அவன் கனவிலும் அறியவில்லை. இருளில் கண்ணில்லாக் குருடர்கள்போல் அலையும் இம்மனிதர்களின் செயல்கள் தாம் என்ன விசித்திரமாயிருக்கின்றன! அந்தக் காமரூபனாவது அல்லது கேசவனாவது தம் இருவருக்கும் உறவு உண்டாக்கியது யார் என்று கொஞ்சமேனும் சந்தேகிக்கவில்லையே! இல்லையெனில், அரசர்களுக்குச் சாதாரண நாவிதர்களுடன் நட்பு ஏற்படுவது எப்படி? ஒரு வண்டியில் பூட்டிய இரு காளைகள்போல் தம் இஷ்டத்திற்கு மாறாகவே அவ்விருவரும் ஒரே இடத்திற்கு ஓட்டிச் செல்லப்படுவதை அவர்கள்தாம் எப்படி அறிவார்கள்?

வெகு நேரம் யோசனை செய்துவிட்டுப் பிறகு காமரூபன் தலையை மொட்டையடித்துக்கொண்டு காவியுடை தரித்துத் தைரியமாய் அரண்மனை வாயிலையடைந்தான்.

“அரசன் நோயைத் தீர்க்கும் மருந்து என்னிடம் இருக்கிறது. என்னை உடனே ராஜ சமுகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்” என்று அவன் வாயில் காப்பாளர்களிடம் கூறினான்.

“யார் இது? காமரூபன் அல்லவா இவ்வாறு மாறு வேஷத்தில் வந்திருக்கிறான்? சூரியனை எங்கேயாவது மேகம் மறைக்க முடியுமோ? ஆயினும் அரசனுக்கு இப்பொழுது நாவிதன் தேவையில்லையே!” என்று அவர்கள் ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டார்கள்.

அதைக் கேட்டுக் காமரூபன், “அப்படி இல்லை. நாவிதனுக்குத்தான் எல்லாம் தெரியும். எவ்வளவோ சமயங்களில் மூவுலகங்களிலும் உள்ள சிறந்த வைத்தியர்களைக் காட்டிலும் அவனே அவசியமாயிருப்பான். ஏனெனில் வைத்தியர்கள் உடல் நோய்க்குத்தான் மருந்து கொடுப்பார்கள். 'ஆனால் நாவிதனோ மன நோயையும் கண்டறிந்து கொள்வான். இப்பொழுது நான் அரசன் வியாதியைக் குணமாக்கி விடுகிறேன். எனக்கு வெகுமதி ஒன்றும் தேவை இல்லை. மன்னன் உடலைக் காட்டிலும் எனக்குப் பணம் பெரிதல்ல” என்றான்.

அதைக் கேட்ட வாயில் காவலர் சிறிது யோசனை செய்து முடிவில், ‘வாஸ்தவந்தான். இவன் கூறியபடி செய்வதில் என்ன தவறு? எவ்வளவோ செய்தும் ஒன்றும் பிரயோஜனம் இல்லாதிருக்கும்பொழுது இவனால்தான் ஏதாவது பயன் ஏற்படுமோ என்று பார்ப்பது நல்லதுதானே? யார் கண்டார்கள்? ஒரு வேளை இவன் திவ்விய ரூபத்தைப் பார்க்கும்பொழுது அரசன் மனத்துக்குச் சற்று உத்ஸாகம் உண்டாகலாம்’ என்று எண்ணியவர்களாய்க் காமரூபனை அரசன்முன் அழைத்துச் சென்றார்கள்.

அரசனை எதிரே கண்டதும், கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு காமரூபன் நர்த்தனம் செய்யத் தொடங்கினான். அதனுடன் விரல்களைச் சொடுக்கிக்கொண்டு காக்கையின் குரல்போன்ற கர்ண கடூரமான குரலில் ஏதோ பாட்டும் பாடத் தொடங்கிவிட்டான். அவன் இவ்விதம் கண்டபடி குதிப்பதைக் கண்டு அரசனைச் சுற்றியிருந்தவர்கள் யாவரும் அடக்க முயன்றும் முடியாமல் அரசன் எதிரிலே உரக்கச் சிரிக்கலானார்கள். இச்சப்தத்தினால் உணர்வு பெற்று எழுந்த கேசவனோ மிகக் கோபத்துடன் சுற்று முற்றும் பார்த்தான். காமரூபனைக் கண்டதும் அவனுக்கும் சிரிப்பு அடக்க முடியாமல் வந்துவிட்டது. எல்லோருடனும் சேர்ந்து அவனும் சிரிக்கத் தொடங்கினான். அதனால் மற்றவர்கள் சிரிப்பு இன்னும் அதிகமாக, எல்லோருக்கும் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிட்டது.

“ஆஹா! இந்தக் கோர ரூபம் படைத்த நாவிதனுக்குச் சுக்கிர தசை அல்லவா அடித்துவிட்டது? இவன் குரூபமே இவனுக்குப் பெரிய அதிருஷ்டமாய் விட்டதே! அரசன் இனிமேல் இவனுக்குக் கனகாபிஷேகம் அல்லவா செய்வான்!” என்று எல்லோரும் பேசிக்கொண்டார்கள். ஒரே அடியாய்ச் சிரித்ததில் கேசவனுக்குக் கண்களில் ஜலங்கூட வந்துவிட்டது.

வெகு கஷ்டப்பட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு அவன் காமரூபனை நோக்கி, "இதென்ன விந்தை? நீ யார்? மனிதனா? உன் பெயர் என்ன?" என்று வினவ, தான் யாரென்பதைக் காமரூபன் அவனுக்குக் கூறினான். அதைக் கேட்டுக் கேசவன் மறுபடியும் தாங்க முடியாமல் சிரிக்கத் தொடங்கினான்.

கடைசியாக அவன், "அப்பா! இப்பொழுது எதற்காக இங்கு வந்தாய்? என் வியாதியைப் போக்குவதற்கா அல்லது என்னையே கொன்றுவிடுவதற்கா? அது எப்படியாயினும் கத்திக்கு உறைபோல் உன் பெயர் மட்டும் உனக்கு வெகு பொருத்தமாய் அமைந்திருக்கிறதே. அந்த அதிருஷ்டத்தை என்னவென்று சொல்லுவேன்?" என்றான்.

"மகாராஜா, தாங்கள் உண்மையைக் கூறினீர்கள். ஆனால் அது தங்களுக்குத் தெரியாது. என் பெயர் எனக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது என்பதைத் தாங்கள் சரியாய் அறிந்துகொள்ளாமலே சொல்லிவிட்டீர்கள். கத்திக்கு எவ்வளவோ உறைகள் உண்டு. அப்படியே காலுக்கு அணிவதற்கும் எவ்வளவோ செருப்புகள் இருக்கலாம் அல்லவா?" என்று காமரூபன் பதில் கூறினான்.

"என்ன? ஏதோ அர்த்தமில்லாத பதில் கூறுகிறாயே! எனக்கு விநோதமுண்டாக்குவதற்கா?" என்று அரசன் கேட்டான்.

"கொட்டாங்கச்சியைக் கண்டு உள்ளிருக்கும் ருசிகரமான தேங்காயை அறிய முடியுமோ? அதுபோல் என் வெளித் தோற்றத்தைக் கண்டு நீங்கள் சந்தேகிக்கிறீர்கள். நான் பார்ப்பதற்குச் சிரிப்பு வரும்படியாயிருந்தாலும், இம்மாதிரியான உருவத்துடன் என்னைப் படைத்த குற்றத்திற்காக நான்முகன் மற்ற எவருக்கும் இல்லாத சில சக்திகளை அளித்து அக்குற்றத்திற்குப் பரிகாரம் செய்துவிட்டார்" என்று கூறிக் காமரூபன் மீண்டும் குரலைத் தாழ்த்தி, "மகாராஜா இச்சைப்படி உருவத்தை மாற்றிக் கொள்ளக்கூடியவன்தான் காமரூபன் என்ற பெயருக்கும் ஏற்றவன் அல்லவா?" என்றான்.

கேசவன் அவனை வெறுப்புடன் நோக்கி, "ஏதப்பா! ஒரே அடியாய் அடிக்கிறாயே! அது மட்டும் உண்மையாக இருந்தால் நீ முன்பே அவ்வாறு செய்திருக்கமாட்டாயா? இந்த உருவத்தை விட்டு வேறு எந்த உருவம் கிடைப்பதாயிருந்தாலும் உடனே சம்மதித்திருப்பாயே" என்றான்.

"மகாராஜா! அவ்வளவு அவசரப்பட்டுப் பேசி விடாதீர்கள். நீங்கள் இப்படிப் பழிக்கும் இவ்வுருவத்தினால்கூட எவ்வளவோ பயன் உண்டாகலாம். இந்த ரூபத்தின் உதவியால் அல்லவா நான் இப்பொழுது தங்கள் சந்நிதானத்தை அடைந்தேன்? அந்தப் பாக்கியம் ஒன்றே போதுமே எனக்கு. தாங்கள் வேறு எதைக் கண்டு இவ்வாறு சிரித்துச் சந்தோஷித்திருப்பீர்கள்?"

அம்மொழிகளைக் கேட்ட கேசவன், "ஆம்! அது சரிதான்" என்று ஒப்புக்கொண்டான்.

"இதோ பாருங்கள். இந்த உருவமே மற்ற எல்லாவற்றையும்விட எனக்கு அதிகம் பிடித்ததாயிருக்கலாம். அதன் காரணத்தை யார் கண்டார்கள்? அது எப்படியோ போகட்டும். இதை மட்டும் நான் தங்களுக்குக் கூறுகிறேன். என் இச்சைப்படி இவ்வுருவத்தை மாற்றிக்கொள்ள எனக்குச் சக்தி உண்டு என்பது மட்டுமல்ல; இவ்விஷயத்தில் குதூகலமிருந்தால் தங்களுக்கும் நான் அச்சக்தி உண்டாகும்படி செய்கிறேன். ஏதோ சற்று நேரம் பொழுது போவதற்கு அநுகூலமாக இருக்கும். ஆயினும் தங்களுடைய இத்திவ்விய ரூபத்தை விட்டு வேறு எந்த ரூபத்தைத் தான் தாங்கள் விரும்ப முடியும்?"

கேசவன் அவனை ஆச்சரியத்துடன் நோக்கினான். சிறிது பொறுத்து, "மறுபடியும் நம் பழைய ரூபமே வேண்டும் என்றால் உடனே அதை அடைய முடியுமா?" என்று கேட்டான்.

"அவிழ்த்த ஆடையை மீண்டும் அணிவது எவ்வளவு எளிதோ அவ்வளவு எளிதாக அடையலாம்" என்றான் காமரூபன்.

"சரி, ஆனால் அது எப்படி என்பதைச் சொல்" என்று கேசவன் கேட்டான்.

"மகாராஜா! இப்பொழுது இந்த இடத்தில் அதைச் சொல்லலாகாது" என்றான் காமரூபன்; "அது எல்லோருக்கும் சொல்லக்கூடிய ரகசியம் அல்ல. கோடி ரூபாய் கிடைப்பதாக இருந்தாலும் நான் வேறு எவருக்கும் அதைக் கூறவும் மாட்டேன். தாங்கள் இந்நாட்டு அரசர்; என்னைச் சொல்லும்படிக் கட்டளையிட்டால் நான் சொல்ல வேண்டியவன். ஆகையால் இதைத் தங்களுக்குக் கூறுகிறேன். தங்களுக்கு அதனால் உத்ஸாகம் ஏற்பட்டால் எனக்கு அது போதும். தங்கள் இஷ்டம் எதுவோ

தீர்மானமாய்ச் சொல்லுங்கள். மன்மதன் கூடக் கண்டு மோகிக்கும்படியான திவ்விய ரூபத்தையுடைய தாங்கள் வேறு சரீரம் வேண்டும் என்று எதற்காக விரும்பப் போகிறீர்கள்?”

“என்? உன் சக்தியைப் பரீக்ஷை செய்து பார்க்கலாம் என்றுதான். எனக்கும் தற்சமயம் ஒரு வேலையும் இல்லை. நீ வீணே பெருமை யடித்துக்கொள்கிறாய் என்று நினைக்கிறேன். அப்படி இருந்தால் சொல்லியபடி செய்ய முடியாமற் போனதற்காக உனக்கு நல்ல சிறை விதிக்கச் செய்வேன். அப்படிக்கின்றி உண்மையில் உனக்கு அந்தச் சக்தி இருந்தால், அரசனை விநோதப்படுத்தியதற்குத் தக்க கைம்மாறு உனக்குக் கிடைக்கும்” என்றான் கேசவன்.

அவ்வார்த்தைகளைக் கேட்டு, காமரூபனுக்கு ஆனந்தத்தால் உடம்பெல்லாம் நடுங்கிற்று. அதை மறைக்கும் பொருட்டு அவன், “என் உயிரும் உடலும் மகாராஜாவைச் சேர்ந்தவை. அவர் இஷ்டம்” என்றெல்லாம் கூறிக்கொண்டு மறுபடியும் பாடிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் கூத்தாடத் தொடங்கினான்.

(தொடரும்)

★

## கம்பன் மலர்

[சென்னைக் கம்பர் கழக வெளியீடு. விற்பனை உரிமையாளர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. மலிவுப் பதிப்பு ரூ. 2—0—0; உயரிய பதிப்பு ரூ. 2—8—0.]

கவிச்சக்ரவர்த்தி கம்பரைப்பற்றியும் வானங்கடந்த அவருடைய காவியத்தைப்பற்றியும் மிகுதியாக அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் சென்ற சில வருஷங்களாகத் தமிழ் மக்களிடையே ஓங்கிவருவது நற்காலத்துக்குரிய அறிகுறியாகும். பல அறிஞர்கள் கம்பராமாயணத்திலுள்ள இன்சுவைகளை விளக்கும் கட்டுரைகளை வரைந்து மக்களின் இந்த ஆர்வத்துக்கு உணவளித்து வந்திருக்கின்றனர். கம்பர் விழாவின்போது வெளியான இந்தக் ‘கம்பன் மலர்’ அத்தகைய ஒரு முயற்சியே. இந்தத் தொகுதியில், பல கலைஞர்களின் கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. கம்பர் கலைக்கோயிலில் புகுவதற்கு இது பிரவேச கோபுரமாக அமையும்.




[இந்தக் கட்டுரை யுத்த களத்திலிருந்து வந்திருக்கிறது. இதை எழுதிய சிப்பாய் எழுத்துத் திறமையும் உடையவராக இருப்பதால் துப்பாக்கி பிடிக்கும் கையிலே பேனாவைப் பிடித்து இக்கட்டுரையை எழுதி அனுப்பியிருக்கிறார்.—ப-ர்.]

“சிப்பாயைக் கண்டஞ்சுவார் - இந்த நிலைகெட்ட மானிடரை நினைந்துவிட்டால் - நெஞ்சு பொறுக்குதில்லையே” என்று ஓர் ஆவேசக் கவிஞர் பதைபதைத்தார். அதே நிலை கெட்ட மானிடர் இப்போது சிப்பாயாகவே ஆகிவிட்டாரானால், இதுவும் காலத்தின் கோலந்தானே? “எங்கும் சிப்பாய் மயம் ஜகத்” என்று கூடச் சொல்லிவிடலாம்.

பழங்காலத்திலிருந்தே எங்கள் தொழிலுக்கு ஆதரவு இருந்துகொண்டு வந்திருக்கிறது. ஆனால் ஒரே ஒரு மாறுதல்: அக்கால அரசாங்கம் எங்கள் தொழிலுக்கு வேண்டிய ஆதரவு கொடுத்தது என்றாலும், அத்தனை மதிப்புக் கொடுக்கவில்லை. எங்கோ ஒரு மூலையில், குக்கிராமங்களில் இருந்துகொண்டு, வயிற்றுப் பிழைப்புக்கு மண்ணைக் கிளறிக்கொண்டிருந்த விவசாயிகளுக்கே அளவில்லாத மதிப்புக் கொடுத்தனர் முட்டாள்தனமாக. ‘குடி உயரக் கோனுயரும்’ என்று அவ்வரசாங்கத்தைப் பின்பற்றிக் கூழுக்குப் பாடும் அண்ணாவிப் புலவர்களும் ‘கன்னா பின்னா’ என்று உளறிக் கொட்டிவைத்தனர். அத்தனை அசட்டுத்தனமாக எங்கள் அரசாங்கம் நடந்துகொள்ள அதற்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? எங்கள் தொழிலை விருத்தி செய்வதே மாபெரும் குறிக்கோளாகக் கொண்டு, வியவசாயிகளிடமிருந்தே யுத்த நிதியென்ற ரீதியிலாவது வசூல் செய்து எங்களைக் கண்ணியப்படுத்துகிறது. “கத்தி உயரக் காசு சேரும்” என்று புதுமொழி ஒன்றைச் சொன்னாற் கூடக் குடி முழுகிப்போய் விடாது.

எங்கள் தொழில் இத்தனை தூரம் அபிவிருத்தியடைந்ததற்குக் காரணந்தான் என்ன? ஓர் அரைமீசைப் பேர்வழி இல்லாததையும் இருக்கிறதையும் சொல்லிக்கொண்டு சண்டைக்கு வந்தான். அந்த மீசையும் இல்லாத மேதாவி எதிர்த்து நின்றான். சும்மா இருந்த அசடுகளிலிருந்து ஆளுக்கு இரண்டு பேரைத் தங்கள் சிநேகிதர்கள் என்று சொல்லிக்கொண்டு சண்டை போட்டனர். முடிவு என்ன? எங்கள் தொழிலுக்கு அடித்ததே, பார்க்கலாம் ஒரு பெரிய குருட்டு அதிருஷ்டம்! எங்கள் தொழிலுக்கு லாயக்கோ, இல்லையோ, கைக்கு அகப்பட்டவர்களை யெல்லாம், அப்படியும் இப்படியுமாகப் போட்டு, ஒரு மாதிரியாகச் சீர்படுத்தி எங்கள் தொழிலை விதையும் மரமும் போல ஒரேயடியாய் வளர்த்துவிட்டார்கள். அம்மாதிரியான மேன்மை தங்கிய மன்னர்பிரானின் சிப்பாய்களில் நானும் ஒருவன் என்று நினைக்கும்போது அளவிலா ஆனந்தம் பொத்துக்கொண்டு வந்து, என்ன செய்வதென்று தோன்றாமல் விழிக்கிறேன்.

ஆனால் ஒரே ஒரு வருத்தந்தான். எங்களைப்பற்றியும் எங்கள் தொழிலைப் பற்றியும் வெளியில் இருப்பவர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று நினைக்கும்போது மட்டும், கொஞ்சம் வெட்கமாகத்தான் இருக்கிறது. சிகரெட்டுப் புகைத்த விஷயமாக அப்பாவோடு சண்டை போட்டுக்கொண்ட மேதாவி முதல் ஊர் சுற்றிய வெற்றியில், பரீக்ஷையில் தோற்ற பிருகஸ்பதிவரை ஒருங்கு சேர்ந்து ஒற்றுமையாயிருப்பது பிறருக்குப் பொறாமையாக இருக்கிறதோ என்னவோ!

‘ரேஷன்’ அரிசி சரியாகப் பெற முடியாத பாட்டிக் கிழவி எங்களுக்குத் தான் வசை புராண நாம சங்கீர்த்தனம் போடுகிறாள், எங்கள் மானம் காற்றில் பறக்கும் திவ்ய ரீதியிலே. துணி விலையும் அகவிலையும ஏறிவிட்டால் அதற்கு நாங்கள் என்ன செய்வோம்? அந்தப் பழியும் எங்கள் மேலே வந்து திடீர் திடீரென்று ‘பாம்’ குண்டைப்போல் விழுகிறது. எங்களைப் பற்றிக் கிராம அரசியல் மகாநாடு முதல் மத்திய சர்க்காரின் அஸெம்பிளி வரையில் மண்டையை உடைத்துக்கொண்டு ‘பட்ஜட்’ பாட்டுப் பாடுகிறார்கள்.

மிலிட்டரி லாரி இருக்கிறதே, அது யாரையோ சிலரை, யாதொரு செலவுமின்றிச் சுருக்க வழியாக யமலோகத்திற்கு அனுப்பிவிட்டுத் திரும்பிக்கூடப் பாராமல் போய்விட்டதாம். எங்கோ எங்கள் சகோதரர்களிற் சிலர், ஊருக்குள் புகுந்து வேண்டுமென்றே காதல் கொண்டுவிட்டார்களாம். ‘பசி வந்தால் பத்தும் பறந்துபோம்’ என்ற அருமையான வாசகத்தை விளக்கும்பொருட்டு, எங்களிற் சிலர், பலகாரக்கடையில் பாய்ந்து அங்கே பல நாட்களாகக் காற்றோட்டமின்றித் தவித்த சரக்குகளை, பணங்கொடுத்துக் கடைக்காரரைக் கஷ்டப்படுத்துவானேன் என்ற பெருங் கொள்கையுடன், காலி பண்ணிவிட்டார்களாம். இம்மாதிரியான பல அபிப்பிராயங்கள் நாட்டிலே பரவி எங்கள் மானத்தை வாங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் உண்மையில் எங்கள் தொழில் என்ன செய்யும்?

இவற்றின் பயனாக எங்களை யாரும் கண்டால் அந்தப் பக்கமாகத் திரும்பிக் கொண்டு ஏளனச் சிரிப்புச் சிரிக்கின்றனர். எதிரிலேயே சிரித்தால் லகுவில் விட்டுவிடுவோமா என்ன? சாணிக்கலர்ச் சட்டையின் சக்தியைக் காட்டி எங்கள் தொழிலின் மேன்மையை விளக்கிவிடமாட்டோமா?

ஒரு நண்பர் சொன்னார்: “எங்கள் தொழிலை மேற்கொள்ளுமுன் மூளையைப் பத்திரமாக வீட்டிலே வைத்துவிட்டுப் போக வேண்டும்” என்று. ஆனால் உண்மை இதுவல்ல. உடம்பைவிட மூளைக்குத்தான் அதிக வேலை இருக்கிறது. உடம்பை மட்டும் உபயோகிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. செம்மறியாட்டு ஞானமும் வேண்டும். தலைவர் உத்தரவு போட்டுவிட்டால் அவ்வளவுதான். அது நல்லதோ கெட்டதோ பணிந்துதான் ஆக வேண்டும். “முதலில் உத்தரவிற்குப் பணிந்துவிடு. அதன்பின் அதைப்பற்றி விவாதி” (Obey the order and then complain) என்பதுதான் எங்களுக்கு முதல் முதலில் போதிக்கப்படும் பாடம். சிற்சில சமயங்களில் உத்தரவுகளுக்குப் பணிந்துவிட்டு, அதைப்பற்றி விவாதிக்க மறுவுலகத்திலேதான் வேண்டிய அவகாசம் கிடைப்பது உண்டு. உத்தரவு போட்டவரும் அநேகமாகப் பின் தொடர்ந்து வருவாராதலின் விவாதத்தை அங்கு ஆற அமர வைத்துக்கொள்வதில் என்ன ஆக்ஷேபம்?

மூளையைக் கட்டி வீட்டில் வைத்துவிடுவதற்குப் பதில், சில ஆசாரங்களைப் புதைத்துவிட்டு, எங்கள் தொழிலில் இறங்குவதே சிலாக்கியமாகும். “காலைக்

கடன் முடித்தாயா? குளித்தாயா?" என்ற கேள்விகளுக்கு இங்கு இடமில்லை. "சப்பாத்திக்குப் 'பாலிஷ்' போட்டாயா? க்ஷவரம் செய்துகொண்டாயா?" என்பது தான் கேள்வி. சாப்பிடும்போது சப்பாத்தி அணிந்துகொண்டிராவிடில், அவன் எங்கள் தொழிலுக்குப் பொருந்தாதவன். ஒருவர் கால்மாட்டில் அடுத்தவர் தலையும், அவருடைய தலைமாட்டில் மூன்றாமவர் காலும் வைத்துப் படுத்துக்கொள்வதே எங்கள் முறை. ஏனென்றால் அதுதான் எங்கள் தொழிலின் ஆசாரம்.

எங்கள் தொழிலில் எங்களுக்குக் கிடைக்கும் பாக்கியம் தனிப்பெருமை பெற்றதாகும். எந்தச் சீதோஷ்ண நிலையிலும் சமாளிக்கத் தகுந்த அப்பியாசம் எங்களுக்கு அளிக்கப்படுகிறது. உலகில் எந்த இடத்திலும் வாழும் ஒரு பெரிய உரிமை நாங்கள் வேண்டாமலேயே எங்களுக்குள் திணிக்கப்பட்டிருக்கிறது. எந்த மாதிரியான உணவையும் உள்ளே தள்ளவோ, ஜீரணிக்கவோ எங்களால் முடியும். வெயிலும் மழையும் எங்கள் நண்பர்கள். பசியும் தாகமும் எங்கள் அற்பமான எதிரிகள். சுருங்கக் கூறினால், ரஸ்தாவில் நடமாடித் திரியும் ரோலர்களை எங்களோடு ஒப்பிடத்தக்க உயர்ந்த அந்தஸ்தைப் பெற்று ஆனந்தபரவசத்தில் ஈடுபட்டிருக்கிறோம்.

எத்தனையோ அரிய பழக்கங்கள் எங்கள் தொழிலின் மேன்மையைக் குறிக்கின்றன. இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வரும் பல்வேறு பாஷை பேசும் நண்பர்களோடு கூடிக் குலாவுகிறோம். ஹிந்தி தெரியாது. எனினும் கேள்வி முறையால் உணர்ந்த ஒன்றிரண்டு வார்த்தைகளை வைத்துக்கொண்டு, தலை, கை, கால், கண் முதலியவற்றின் உதவியால் அவர்களோடு பேசும் 'பஸ்கி' எடுப்பது ஆனந்தமாகத்தான் இருக்கிறது. பெரும்பான்மையாக ஆங்கிலம் உதவி செய்கிறது. மாலைநேரங்களில் பார்த்தால், வெவ்வேறு பாஷைகளில், பல்வேறு மெட்டுகளில் அநேக விதமான தொண்டைகளிலிருந்து ஒரே சமயத்தில் ஒலிக்கும் கீதங்களின் கூக்குரலானது நம் காதுக்கு அதிர்ச்சியை உண்டாக்கும். அந்த அதிர்ச்சியிலும் இன்பம் இருக்கத்தான் செய்கிறது.

ஜாதி மத வித்தியாசம் கடுகளவும் எங்கள் தொழிலில் இல்லை. எல்லோரும் ஓர் நிறையாக இல்லாவிடினும் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் இந்திய மக்கள் என்பதற்கு இணங்க நடந்துகொள்கிறோம். உத்தரவுக்குப் பணியவும், ஒற்றுமையுடன் காரியங்களைச் செய்யவும் எங்கள் தொழில் எங்களைப் பழக்கப்படுத்துகிறது. இம்மாதிரியான பழக்கமே எதிர்கால இந்தியாவிற்குத் தேவையாதலின், எங்கள் தொழிலில் மேன்மையும் இருக்கிறதென்பதை உணரலாம்.

மனித உள்ளம் எறக்குறைய எங்கே இருந்தாலும் ஒரே மாதிரியானதுதானே? ஆகவே நாங்கள் எங்கள் வெளியுலக உணர்ச்சியை அறவே புறக்கணித்துவிடவில்லை. எங்கள் தொழில் அதற்கு இடையூறாக நிற்கவும் இல்லை. வீட்டின் மேலும் நாட்டின்மேலும் இருக்கும் பற்று உறுதி பெறுகிறதேயன்றிக் குன்றிவிடாது. "இந்தியாவைக் காக்க எழுந்து வாருங்கள்" என்று யுத்த முன்னணி மேதாவிகள் கூவும் அழைப்பில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. எதிர்கால இந்தியா சக்தி பெற எழுந்துவரத்தான் வேண்டும்; ஆம், எதிர்கால இந்தியாதான்.

---

"வலிமையுற, நோயின்றி உடம்பைக் காத்தல் அவசியம். உடம்பு மிகச் சிறந்த கருவி. அதனிலும் சிறந்த கருவி உன்னிடம் இல்லை. ஆதலால், அதை வலிதாக, நோயற்றதாக வைத்துக்கொள். உனது உடம்பு எஃகைப்போல் வலியதென்று பாவனை செய்துகொள். மெலிந்தோருக்கு விடுதலை இல்லை. மெலிவையெல்லாம் துரத்திவிடு. உடம்பு வலிதென்று அதனிடம் சொல்லு. அறிவு வலிதென்று அறிவினிடம் சொல்லு. உன்னிடத்திலே நீ எல்லையற்ற திடமும் நம்பிக்கையும் கொண்டிரு."

—ஸ்வாமி விவேகானந்தர்.

# விதியின் வெற்றி

**சாத்தூர் சங்கரன்**

*[சித்திரை இதழில் பூவாளூர் சுந்தரராமன் எழுதிய "பிரம்மாவின் தலையெழுத்து" என்ற சிறுகதையை வாசித்ததும், எனக்கு இன்னொரு நாடோடிக் கதை ஞாபகத்திற்கு வந்தது. ஸ்ரீ சுந்தரராமன் எந்த நாடோடிக் கதையைத் தழுவி எழுதினாரோ அக்கதையுடனே சேர்ந்ததுதான் இக்கதையும். ஒரு வகையில் இரண்டு கதைகளும் மாறுபாடான பிரச்னைகளை விளக்குகின்றன. 'விதியை மதியால் வெல்லலாம்' என்பதற்கு உதாரணமாக முன் கதையை நாம் கருதினால், அது சாத்தியமல்ல என்று நிரூபிப்பதற்கு இக்கதை உதவும்.]*

குவா குவா என்ற சத்தம் கேட்டது. திண்ணையில் உட்கார்ந்திருக்கும் கிருஷ்ண தீக்ஷிதருக்கு மட்டில்லாச் சந்தோஷம். தன் தர்ம பத்தினி ஆண் மகவைப் பெற்றாளென்றால் யாருக்குத்தான் சந்தோஷம் வராது?

கிருஷ்ண தீக்ஷிதர் நன்றாக அத்தியயனம் செய்தவர். தம் ஐம்புலன்களையும் அடக்கித் தவம் செய்தவர். தம்முடைய தவத்தினால் சில அரிய சக்திகளையும் பெற்றிருக்கிறார். மற்றவர்களின் பூர்வ ஜன்மங்கள் எவை என்று அறியக்கூடிய சக்தியும், அவர் அடைந்திருக்கிற அபூர்வ சக்திகளில் ஒன்று.

தமக்கு ஆண் பிள்ளை பிறந்திருக்கிறதைக் கண்டதும், அக்குழந்தையின் பூர்வ ஜன்மம் எது என்று அறிய ஆவல் பிறந்தது. சில மாதங்கள் கழித்து அவர் பத்தினி, அந்த அருமைப்பிள்ளையைத் தன் பர்த்தாவிடம் காட்டினாள். அவர் சில மந்திரங்களை உச்சரித்து, தாம் ஜபம் செய்து வைத்திருந்த புனித தீர்த்தத்தைத் தம் மகவின் மேல் தெளித்தார்.

மந்திர நீர் பட்டவுடன் மூன்று மாதத்து மகவு அதன் தாய் அறியாத பாஷையில் பேசத் துவக்கியது. அந்தப் பாஷையைத் தீக்ஷிதர் அறிந்தவராதலால் அம்மகவுடன் அவர் சம்பாஷிக்கத் தொடங்கினார்.

"நீ யார்? நீ ஏன் எனக்கு மகவாகப் பிறந்திருக்கிறாய்?" என்று வினவினார் தீக்ஷிதர்.

"நான் முன் ஜன்மத்தில் அம்பட்டன். தாங்கள் எனக்குத் தர வேண்டிய பாக்கி ரூபாய் நூறு உண்டு. அதைப் பெற்றுப் போகத்தான் இந்த ஜன்மம் எனக்குப் பிரம்மா அளித்திருக்கிறார்" என்றது பூர்வ ஜன்ம அறிவு படைத்த அந்தக் குழந்தை.

தீக்ஷிதர் மிகவும் தீவிரமாக யோசனை செய்தார். இதுவரையில் பிறந்த குழந்தைக்காக ரூபாய் தொண்ணூறு செலவாகி யிருந்தது. அக்குழந்தையின் போஷணைக்காக அன்றே பத்து ரூபாய் செலவு செய்தார். அன்று மாலை திடீரென்று குழந்தைக்கு மாந்த வலி வந்தது. தீபம் வைக்கும் நேரத்திற்குள் இறந்துவிட்டது. தீக்ஷிதரின் மனைவிக்கு ஆறாத்துயர். தன் பர்த்தா ஏதோ மந்திரம் ஜபித்துத் தன் மகவைக் கொன்றுவிட்டார் என்றுகூட எண்ணலானாள்.

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. தீக்ஷிதருக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. தீக்ஷிதர் தம் சக்தியைப் பிரயோகித்தார். அப்பெண் மகவு முன் ஜன்மத்தில் வண்ணாத்தி என்றும், வண்ணாத்திக்குச் செல்ல வேண்டிய ரூபாய் ஐம்பதுக்காக இந்த ஜன்மம் எடுத்திருக்கிறதென்றும் தீக்ஷிதர் அறிந்தார். அன்றே அவர் அம்மகவிற்காக ஐம்பது ரூபாய் செலவு செய்தார். அந்தக் குழந்தையும் அன்று சூரியன் அஸ்தமிப்பதற்குள் இவ்வுலகை நீத்தது.

பின்னும் சில ஆண்டுகள் சென்றன. தீக்ஷிதருக்கு இப்பொழுது ஓர் ஆண் மகவு பிறந்தது. தம் மந்திர நீரை அதன்மேல் தெளித்து, அதன் பூர்வ ஜன்மம் யாதென வினவினார்.

"நான் பூர்வ ஜன்மத்தில் ஒரு தீக்ஷிதராக இருந்தேன். அப்பொழுது தங்களிடத்தில் என் குடும்பச் செலவுக்காக மூவாயிரம் ரூபாய் வாங்கினேன். அதைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அதை உங்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி பிரம்மா எனக்கு இந்த ஜன்மம் அளித்திருக்கிறார்" என்று பதிலளித்தது அந்தக் குழந்தை.

தீக்ஷிதரின் தீக்ஷண்ய புத்தி தீவிரமாக வேலை செய்தது. 'நாம் இந்தக் குழந்தையிடமிருந்து மூவாயிரம் ரூபாய் பெற்றால்தானே இது சாகும்? மூவாயிரம் ரூபாயை வாங்காவிட்டால்?' என்று யோசித்து ஒரு தீர்மானத்திற்கு வந்தார். எக்காரணத்தைக்கொண்டும் தாம் உயிருள்ள வரையில் அந்த மகனிடமிருந்து ஒரு தம்படிகூட வாங்கக் கூடாதென்பதே அத்தீர்மானம்.

அக்குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. குலாசாரப்படி அதற்கு உபநயனம் செய்து, தாமே அவனுக்கு வேதாப்பியாஸம் செய்து வைத்தார்.

வருஷங்கள் பல சென்றன. இப்பொழுது தீக்ஷிதரின் பையன் ராமன் மிகவும் பிரபல வைதிகனானான். தீக்ஷிதரின் ஏற்பாட்டின்படி ராமன் சம்பாதிக்கும் பணம் எதையும் தகப்பனாரிடமும் கொடுப்பதில்லை. குடும்பச் செலவுக்கும் போடுவதில்லை. தான் சம்பாதிக்கும் பணத்தை ஒரு பையில் போட்டு இடுப்பிலேயே கட்டிக் கொள்ள வேண்டியது என்பது தீக்ஷிதரின் கண்டிப்பான கட்டளை. தகப்பனாரின் கட்டளை ராமனுக்குப் பிடிக்கவில்லை. அதன் காரணம் யாதென்று, தகப்பனாரைக் கேட்டான் ராமன். தீக்ஷிதர் சரியான காரணம் சொல்லவில்லை. ஆனால் ராமன் தன் தகப்பனாரின் கட்டளையை அணுவளவும் பிசகாமல் நிறைவேற்றிவந்தான்.

ராமனுக்கு இப்பொழுது இருபத்தைந்து வயசு. வைதிகத்தில் நல்ல பெயர். வருமானமும் நல்ல வருமானம். ராமனின் தாய்க்கு மாத்திரம் வருத்தம். எந்தத் தாய்க்குத்தான் தன் பிள்ளை சம்பாதித்துத் தனக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்ற ஆசை இராது? ஆனால் தன் கணவனின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து ராமனிடமிருந்து ஒரு தம்படி வாங்குவதில்லை. இதற்கு முன் தனக்குப் பிறந்த சிசுக்களை மந்திரத்தால் கொன்றதுபோல், இந்தப் பையனையும் அப்படிச் செய்யாது விட்டாரே என்று கணவனிடம் கொஞ்சம் நன்றி அறிதலுங்கூட அவளிடம் இருந்தது.

ஒரு நாள் மாலை. தீக்ஷிதரும் அவர் பையன் ராமனும், பக்கத்து ஊருக்கு ரஸ்தா வழியாகச் சென்றுகொண்டிருந்தார்கள். ராமனுக்கு வயிறு வலித்தது. ஆகையால் தன் இடுப்பிலுள்ள பண மூட்டையை அவிழ்த்துக் கையில் வைத்துக்கொண்டு நடக்கலானான். வழியில் ஒரு பெரிய கிணறு. அதில் ஒரு சிறு பெண் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தாள். இவர்கள் கிணற்றண்டை நெருங்கினார்கள். அந்தப் பெண் அஜாக்கிரதையால் கால் தடுக்கிக் கிணற்றில் விழுந்துவிட்டாள். "ஐயோ! அந்தப் பெண்ணை உடனே காப்பாற்று" என்று தீக்ஷிதர் கத்தினார்.

ராமன் நல்ல பலசாலி. தன் கையில் வைத்திருக்கும் பண முடிப்பைத் தந்தையின் கையில் அவசரமாகக் கொடுத்துவிட்டு, பெண்ணைக் காப்பாற்ற அவன் கிணற்றில் குதித்தான். தீக்ஷிதரும், சிறு பெண் கிணற்றில் விழுந்த பதற்றத்தில், பிரதிஞ்ஞையையும் மறந்து பையன் கையிலிருந்து பண முடிப்பைப் பெற்



றுக்கொண்டார். வழியில் சென்ற நாலு ஐந்து செம்படவர்களும் கிணற்றில் குதித்தார்கள். அந்தச் சிறு பெண் கிணற்றிலிருந்து உயிருடன் வெளியே எடுபட்டாள். ஆனால், ராமனுக்கோ கிணற்றில் குதித்த அதிர்ச்சியில் பிராணன் போய்விட்டது. தீக்ஷிதருக்குத் திடீரென்று தம் பிரதிஞ்ஞை ஞாபகத்திற்கு வந்தது. பையன் தந்த பணமுடிப்பை அவிழ்த்துப் பார்த்தார். அதில் சரியாக ரூபாய் மூவாயிரம் இருந்தது. ஒரு சல்லி அதிகமாகவும் இல்லை, குறைவாகவும் இல்லை!

[நாடோடிக் கதை]




ஓர் ஊரில் கறுப்பன் என்று ஒருவன் இருந்தான். அவன் மிகவும் ஏழை. கல் உடைப்பது அவன் தொழில். அவன் தாய்தகப்பனார் மிகவும் கிழவர்கள். அவன்தான் தன் பெற்றோர்களுக்கும் சம்பாதிக்க வேண்டியதாயிற்று.

காலையிலிருந்து சாயங்காலம் வரையில் கையில் ஒரு சிற்றுளி பிடித்து 'லொட், லொட்' என்று கற்களை அவன் உடைத்துக்கொண்டே இருப்பான். கல் உடைத்து உடைத்து அவனுக்குக் கை சோர்ந்துவிடும். கூலியும் அதிகம் இல்லை. மிகவும் பசியினால் வயிறு ஒட்டிக்கொண்டுவிடும். மிகவும் கஷ்டப்படுவான். பொய் சொல்லமாட்டான். திருடமாட்டான். கடவுள் பக்தி அதிகம்.

ஒரு நாள் அவன் வழக்கம்போல் உட்கார்ந்து கல் உடைத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது, 'எல்லோரும் பணக்காரர்களாய் இருக்கிறார்கள். பட்டுச் சட்டையும் ஜரிகை வேஷ்டியும் அணிந்து ஆகாரக் கவலையில்லாமல் சுகமாய் இருக்கிறார்கள். நான் மாத்திரம் கஷ்டப்படுகிறேனே. நானும் அப்படிப் பணக்காரனாக இல்லையே!' என்று எண்ணினான்.

அப்பொழுது ஒரு தேவதை அவன் தலைக்குமேல் போய்க்கொண்டிருந்தது. அவன் நினைத்தது அதற்குத் தெரிந்தது. "அப்படியே இவனுக்கும் ஆகட்டும்" என்று அது உடனே அநுக்கிரகம் செய்தது. அவ்வளவுதான். கல் உடைக்கும் கறுப்பன் ஒரு பெரிய பங்களாவில் இருந்தான். எங்கே பார்த்தாலும் சோபாவும் மெத்தையும் வெகு சொகுசாக இருந்தன. வயிற்றுக்கு ஒன்றும் இல்லை என்ற கவலை அடியோடு ஒழிந்தது. இப்படிக் கொஞ்ச காலம் அவன் பங்களாவில் சுகமாய் வாழ்ந்துவந்தான்.

ஒரு நாள் அந்த ஊர் ராஜா யானையின்மேல் அம்பாரி வைத்துக் குடை பிடித்துக்கொண்டு பவனி சென்றான். அவனைச் சுற்றிப் பரிவாரங்கள் எல்லாம் தடபுடலாய்ப் போனார்கள். கல் உடைப்பவன் கண்டான். 'நானும் ராஜாவாக இருந்தால் நன்றாக இருக்குமே. ராஜா பாடு ரொம்ப சொகுசு போலிருக்கிறதே!' என்று எண்ணினான்.

முன் வந்து உதவிய தேவதையே இப்பொழுதும் தோன்றி, "அப்படியே ஆகட்டும்" என்றது.

கல் உடைப்பவன் பெரிய ராஜாவாகிவிட்டான். எல்லோரும் அவனுக்குக் கீழேதான்; யார் ஆனாலும் அவன் சொல்லுகிறபடிதான் கேட்க வேண்டும். ராஜா என்றால் தெய்வத்துக்குச் சமானம் என்று எண்ணியிருந்தான்.

ஒரு நாள் அந்த ராஜா அரண்மனை உப்பரிகைமேல் இருந்தான். வெயில் வெகு கடுமையாய் அடித்தது. அவனுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. மந்திரியைக் கூப்பிட்டு, "இது என்ன இது, உடம்பெல்லாம் வியர்க்கிறது?" என்றான்.

"மகாராஜா, சூரியன்தான் இப்படிச் செய்கிறான்" என்றான். ராஜாவுக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. "சூரியனிடம் நான் சொன்னேன் என்று சொல்; வெயில் கடுமையாய் அடிக்கக்கூடாது என்று உத்தரவு செய்திருப்பதாய்த் தெரிவியும்" என்றான்.

மந்திரி சூரியனைப் பார்த்து அப்படியே அரசனின் உத்தரவைத் தெரிவித்தான். ஆனால் சூரியன் இந்த உத்தரவை லக்ஷ்யம் செய்யவில்லை. கல் உடைக்கும் கறுப்பன் பார்த்தான். 'சே! இது என்ன உத்தியோகம்! அரசனைவிடச் சூரியனே மேலானவன் என்று தெரிகிறது. நாமும் சூரியன் ஆகிவிட்டால் நலம்' என்று நினைத்தான்.



அவன் வேண்டுகோளின்படி தேவதையும், "சரி, அப்படியே ஆகட்டும்" என்றது.

அவன் சூரியன் ஆகிவிட்டான். எங்கே பார்த்தாலும் சூரிய கிரணங்களை வீசினான். எல்லாவற்றையும் பொசுக்கினான். மனம் போனபடி எல்லாரையும் பொசுக்கினான்.

இப்படியிருக்கையில், ஒரு மேகம் ஒரு நாள் அவனை மறைத்துவிட்டது. அது அவனிடம், "உன் ஜம்பம் என்னிடம் செல்லாது!" என்று கூறிப் பரிகசித்தது.

உடனே அவனுக்குக் கோபம் வந்தது. 'சூரியன்தான் எல்லாவற்றையும்விடப் பெரியவன் என்று நினைத்தேன். இந்த மேகம் என்று வேறு ஒன்று இருக்கிறதே! நாமும் இப்படி மேகமானால் நல்லது' என்று எண்ணினான்.

அப்பொழுது தேவதை வந்தது; "சரி, மேகமாய்ப் போ" என்றது.

உடனே கல் உடைப்பவன் மேகமாகிவிட்டான். காற்றில் அங்கும் இங்கும் உல்லாசமாய்த் திரிந்தான். எங்கே பார்த்தாலும் மழையாய்க் கொட்டினான். வெள்ளப் பெருக்கு எடுக்கும்படி செய்து நதி, குளம், ஏரி எல்லாம் உடைத்து அல்லோல கல்லோலமாக்கினான்.

'சூரியனால் நம்மை ஒன்றும் பண்ண முடியாது. நம் இடியின் கர்ஜனை உலகத்தை ஆட்ட முடியும்' என்று எண்ணினான்.

ஒரு சமயம் இப்படியே கர்வத்துடன் சஞ்சாரம் செய்துகொண்டிருக்கும் போது ஒரு மலை இந்த மேகத்தைத் தடுத்துவிட்டது. அவன் ஆனமட்டும் அந்த மலையோடு மோதிப் பார்த்தான். மலை அசையவே இல்லை. மேகமாக இருந்த அவன் முக்கி முனைந்து தோற்றுவிட்டான்.

"மேகத்திற்கு மேல் மலை பெரிது" என்று அவனுக்குத் தோன்றிவிட்டது. ஆகவே தானும் மலையாக மாறிவிட்டால் ஈடு இணையற்று இருக்கலாமே என்று ஆசைப்பட்டான்.



இப்பொழுதும் தேவதை உபகாரம் செய்தது; "மலையாய்ப் போ" என்று அருளியது.

உடனே அவன் மறு உருவத்தை அடைந்தான். கம்பீரமாய் ஆகாயத்தை அளாவி நின்றுன். அவன் மட்டற்ற சந்தோஷமடைந்தான். இப்படி இருக்கும்போது ஒரு நாள் ஒரு கல் உடைப்பவன் அந்த மலைக்கு வந்தான். சிற்றுளியால் மலையை உடைக்க ஆரம்பித்தான். 'லொட், லொட்' என்று அவன் மேலும் மேலும் போட்டுக்கொண்டே போனுன். மலையால் ஒன்றும் செய்ய முடியவில்லை. 'எல்லாரிலும் கீழ்ப்பட்ட இந்தக் கல் உடைப்பவன் கையில் கஷ்டப்படுகிறேனே. அவன்போல் ஆனுல்தான் நலம்' என்று மலை எண்ணியது.

உடனே தேவதை சிரித்தது. "பழையபடியே கல் உடைப்பவனுகப் போ!" என்றது. அவன் கல் உடைப்பவன் ஆகிவிட்டான்.

[ஓர் ஆங்கிலக் கதையைத் தழுவியது.]

---

# புதிய புஸ்தகங்கள்

தினமணி வெளியீடுகள். 2. ரவீந்திரநாத டாகூர் - வாழ்க்கையும் கவிதையும் - ஸ்ரீ கி. சந்திரசேகரன் எழுதியது. விலை 8 அணு.

ஒரு கவிஞனுடைய வாழ்க்கையை அவனது கவிதை மூலமாகவும், அவன் கவிதையை அவனது வாழ்க்கை மூலமாகவும் பார்த்து ரஸிக்கவேண்டும். அவனது வாழ்க்கையும் கவிதையும் இணைந்தே செல்லும். அதிலும் ரவீந்திருடைய வாழ்க்கை பெரிது; கவிதை உன்னதமானது. இந்த இரண்டையும் கலைக்கண்களோடு பார்த்து இதன் ஆசிரியர் எழுதியிருக்கிறுர். நம் நாட்டுப் பழைய கலைத்தத்துவத்திலிருந்து புதிய மோகன முறுவலோடு டாகுர் கவிதை உருவெடுத்ததென்பதை ஆசிரியர் நன்கு வற்புறுத்தியிருக்கிறுர்.

3. கைலாஸம், மானஸ ஸரோவர் - எஸ். வேதாந்தம். விலை 8 அணு.

மானஸ ஸரோவரம்வரை யாத்திரை செய்த ஆசிரியர் இந்தப் புஸ்தகத்தை ஒரு விரிவான டைரியைப்போல எழுதியிருக்கிறுர். இப்புஸ்தகத்தால் பல விஷயங்கள் தெரியவருகின்றன. ஆனுலும் வர்ணனைப் போக்கில் இன்னும் விறுவிறுப்பு இருந்தால் புஸ்தகம் சுவையுடையதாக இருக்கும்.

மாளவிகா: சரோஜா ராமமூர்த்தி; சக்தி காரியாலயம், சென்னை. விலை ரூ. 1—4—0.

லார்ட் லிட்டன் எழுதிய 'பாம்பி நகரத்தின் இறுதிக்காலம்' (Last days of Pompeii) என்ற கதையின் தழுவல். தமிழ்நடை இனியது. மாளவிகாவின் செய்கைகள் அவளை இந்தியப் பெண்ணுகக் காட்டவில்லை. கதையின் முடிவு அவசரப்பட்டு முடித்ததுபோல இருக்கிறது.

காதலர் உள்ளம்: வியானர்ட் பிராங்க்; எம். எல். சபரிராஜன் மொழிபெயர்ப்பு; சக்தி காரியாலயம், சென்னை. விலை ரூ. 1—12—0.

உள்ளத்தை உருக்கும் கதை. எத்தனை தடவை படித்தாலும் சலிக்காது. மொழிபெயர்ப்பு மிகவும் நன்றுக இருக்கிறது.